விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 28 புதன்கிழமை (11.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 174

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# யுத்த வடுக்கள் இன்னமும் இலங்கையில் மாறவில்லை!

## நவநீதம்பிள்ளை தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தம் முடிந்து ஐந்து வருடங்கள் கழிந்துவிட்ட போதும் யுத்த வடுக்கள் இன்னும் மாறாமல் இருப்பதாக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை கூறியுள்ளார்.

நேற்று ஜெனிவாவில் ஆரம்பமான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 26ஆவது அமர்வின் ஆரம்ப உரையில் நவநீதம்பிள்ளை இதனை தெரிவித்தார்.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து 5 ஆவது ஆண்டு கடந்த மாதம் நிறைவடைந்தது. எனினும் இலங்கையில் பயங்கரவாதத்தாலும் போரினாலும் உண்டான வடுக்கள் இன்னும் மாறவில்லை.

பொறுப்பு கூறுதலையும் அதன் மூலம் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கும் இந்த பேரவையினால்

19 ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணைக்கான நிதியை தடுக்க அரசு மேற்கொண்ட முயற்சி தோல்வி

### ஐ.நாவில் அம்பலமாகியது

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஐ.நா மனிதவுரிமைகள ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக்கான நிதியை கிடைக்காமல் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் இரகசிய முயற்சிகளை மேற்கொண்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 25-வது கூட்டத்தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

20 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நாவின் விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்காது

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவினரின் விரிவான விசாரணைகளுக்கு தாம் ஒத்துழைப்பு வழங்க போவதில்லையென இலங்கை அறிவித்துள்ளது.

இலங்கையில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென, நேற்று ஜெனிவாவில் ஆரம்பமான மனித உரிமைகள் பேரவையின் 26 ஆவது அமர்வின் போது, மனித உரிமை ஆணையாளர் நவிபிள்ளை, ஆற்றிய உரையினை அடுத்து இலங்கை பிரதிநிதிகள் குழுவின் தலைவர் ரவிநாத் ஆரியசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

விடுதலை புலிகள் இயக்கம் இலங்கையில் முற்றாக அழிக்கப்பட்டிருந்தாலும், சர்வதேச ரீதியில் இந்த அமைப்பின் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## பாடசாலை மாணவிகளை படமெடுத்த படையினர்!

### மன்னாரில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

தமிழ்பாடசாலை மாணவிகளை வரிசையாக நிறுத்தி புகைப்படம் எடுத்த இராணுவ புலனாய்வுத் துறையினர் விரட்டப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று மன்னாரில் இடம் பெறறுள்ளது.

வட மாகாணச் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரம் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னாரில் மன்னார்

19 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழக மீனவர்கள் வேலை நிறுத்தம்

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுகின்றமைக்கு உடனடி நிரந்தர தீர்வினை பெற்றுத் தர, மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி தமிழக மீனவர்கள் வேலை நிறுத்தப் பேராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒன்று கூடி இருந்த தமிழகத்தின் 11 மீனவர் சமாஜங்களின் தலைவர்கள் மேற்கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் 3 ஆயிரத்து 700 ராமே

19 ஆம் பக்கம் பார்க்க....

## யுத்தக் குற்ற விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும்

### பிரி.யும் அமெரிக்காவும் கோரிக்கை

(கொழும்பு)

யுத்தக் குற்றச் செயல் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரித்தானியாவும், அமெரிக்காவும் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் நியமிக்கப்படும் சர்வதேச விசாரணைகளின குழுவின் பணிகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகின்றது என தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 26-ம் அமர்வுகளில் பங்கேற்ற அமெரிக்க பிரித்தானிய பிரதிநிதிகள் இதனை வலி

20 ஆம் பக்கம் பார்க்க....

## மோடிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஜெயாவின் உருவப் பொம்மை எரிப்பு




(கொழும்பு)

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை விவகாரத்தில் தலையிடவேண்டாம் என்று வலியுறுத்தியே அக்குழுவினர் ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டுள்ளனர்.

தேசிய அமைப்பின் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினால் கொழும்பு-காலி வீதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க....

## 101 புதிய கிராம சேவையாளர்களுக்கு இணைப்புக் கடிதம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கான கிராம சேவையாளர்களுக்குரிய வெற்றிடங்களை நிரப்பும் வகையில் நேற்று முன்தினம் 101 புதிய கிராமசேவையாளர்களுக்கு இணைப்புக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் கிராம சேவையாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த முயற்சியின் பயனாக நேற்றைய தினம் புதிய கிராம சேவையாளர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டதாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். இந்நிகழ்வு யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது தலைமை தாங்கி உரை

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வியாழ மாற்றம் பலன்கள்

சோதிட ஞானி சண் மாஸ்ரர் ஆ.சண்முக லிங்கம் எழுதிய 13.06.2014 இல் வியாழன் மாற்றம் பலாபலன்கள் நூல் வெளிவந்து விட்டது. **ரூபாய் 50/-**

சி.சி.ரி.எம். பாடசாலை லேன்,
கொக்குவில் மேற்கு.
தொ.பே : 0772845000
(6733)




## வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் 1 பரப்பு 15 1/2 குழி காணியில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0777111400
(6720)


# வீதி திருத்தும் பணியில் நின்றவர்களை மோதித் தள்ளியது உழவு இயந்திரம்



(கரணவாய்)

வேலணை சுருவில் அம்பிகை நகர்ப் ப்குதியில் நேற்று 7.30 மணிக்கு கடற்படையினரின் உழவு இயந்திரம் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து வீதி திருத்தும் பணியில் ஈடுபட்டவர்களின் மீது மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

காயமடைவர்கள் வேலணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார தெரிவித்தனர்.

இதில் தேவதாஸ் அமலேஸ்(வயது37), ரவிச்சந்திரன் ரவிகீதன் (வயது 19) ஆகிய இருவரே படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில் ரவிச்சந்திரன், ரவிகீதனின் உடலின் மீது உழவு இயந்திரம் ஏறியதில் படுகாயம் அடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையினருக்கு உணவு எடுத்துச் சென்ற உழவு இயந்திரமே இவ்வாறு வேகக்கட்டுப்பாட்டினை இழந்து, மேற்படி இருவர் மீதும் மோதி விபத்க்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ-60)




## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் அறிவித்தல்

### தற்காலிக கடைகள், திருவிழாக்கால உடைதேங்காய் ஏலம்

மேற்படி ஆலய வருடாந்த உயர் திருவிழா 28.06.2014 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 13.07.2014 ஆம் திகதி நிறைவு பெறும். இக்காலத்தில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினால் சுட்டிக்காட்டப்படும் இடங்கள் 21.06.2014 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

உயர்திருவிழாக் காலத்தில் சேரும் உடைதேங்காய்களுக்கான பகிரங்க ஏலமும் அன்றைய தினத்திலேயே கூறப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம். பங்குபற்ற விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது வருகை தந்து நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:

01. வியாபாரம் செய்பவர்கள் பிரதேசசபை பொதுசுகாதாரப்பிரிவினரின் முறையான அனுமதி பெறப்பட வேண்டும்.
02. குளிர்பான நிலையம் நடத்துபவர்கள் முறையான அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும்.
03. சுகாதாரம் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
04. ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் அன்றைய தினம் ஏலத்தொகையில் 1/3 பங்குத் தொகையைச் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.
05. மிகுதித்தொகையினை பத்தாம் (10) ஆம் திருவிழாவுக்கு இடையில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

அன்னையின் சேவையில்,
அறங்காவலர் சபையினர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(சி-7626)



## நிரந்தர தொழில்வாய்ப்புகள்

தரம் 6 முதல் O/L, A/L கல்வியுள்ள/ அற்ற அனைவருக்கும் நிரந்திர தொழில்வாய்ப்புகள். சம்பளம் 19000/=, 25000/=, 35000/= உணவு+ தங்குமிடம் சகாய விலைகளில். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் நவீன தொழிற்சாலைகளான ஜேம்/தேங்காய் பால்மா/ கிளவுஸ்/ பொலித்தீன்/ தேயிலை/ குளிர்பானம்/ சொலட்/ பிஸ்கட்... மற்றும் பல தொழிற்சாலைகளுக்கு + பொதியிடல் + லேபல் + உற்பத்தி + களஞ்சிய பிரிவு 18-50 வயது ஆண்-பெண் தேவை. வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு. (நண்பர்கள்/ குழு/ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்)

மேலதிக விபரங்களுக்கு. **தொடர்பு:-0775561883**

(சி-7624)



## மணிவிழா நாயகனை வாழ்த்துவோம்

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர்
திரு.இளையதம்பி ஆனந்தநடராஜா
அவர்களின் மணிவிழா 16.06.2014



ஞாலமதில் வந்துதித்து
ஞானக் கல்விப்படி பற்றி
குன்றதனில் தொழிலுதித்து
குற்ற மில்லா சுதுகிரி அணிசெய்து
சண்டிலிப்பாய் தனிலமர்ந்து - மூன்று
சப்த்த காலமாய் அங்கு
சுந்தரத் தமிழ் இனிமை நயந்து
சூழல் கனியமுதைப் புகட்டி
அகவை அறுபதில் இளைய
ஆனந்தன் ஆற்றிய பணியை
ஆதிச் சிவன் பாதம் போற்றி
ஆனந்த நடராஜரை வாழ்த்துவோம்.



ஆசிரியர்
யா/நவாலி மகா
வித்தியாலயம், மானிப்பாய்.

க.ஸ்ரீநந்தகோபன்
முன்னாள் பகுதித் தலைவர்
ஆரம்பப் பிரிவு
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

(6731)



## SCHOLARSHIPS FOR STUDENTS!

மாணவர்களுக்கான புலமைப்பரிசில்!

China Australia UK NZ



CARRIER PATHWAY FOR STUDENTS OF CAMBRIDGE,EDEXAL & ADVANCE LEVEL

கேம்பிரிச், எடக்சல், உயர்தர மாணவர்களுக்கான வேலைவாய்ப்புக்கான இலகு வழி...

### NANJING MEDICAL UNIVERSITY

(PENDING EDEXEL/CAMBRIDGE/Alevel CAN APPLY)

- *W.H.O & Sri Lanka Medical Council Approved*
- *Low Tuition Fees*
- *After MBBS can study MD in Australia*

**Ten(10) Scholarships for each intake the whole study period**

- *Mechatronic Engineering*
- *Telecommunication Engineering & Commerce*
- *Civil Engineering(All These Courses are in English Medium)*
- *BA(Hons) Business Studies(2 years)*
- *MBA(1 Year)*

**Any of the below Qualification:**

- GCE O/L Credits in Maths, Science and English
- GCE A/L (Good Results)
- Recognised Degree

கலந்துரையாடல்/ Seminar
மேற்படி ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மானிப்பாயில் எதிர்வரும் 14.06.2014 சனிக்கிழமை காலை 09.00 மணியளவில் உங்கள் பிள்ளைகளின் எதிர்கால கல்வி முன்னேற்றங்கள் குறித்த விஷேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. எனவே பெற்றோர்கள், பிள்ளைகள், நலன் விரும்பிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
நிர்வாகி

மேலதிக விபரங்களுக்கு:
For Further Details :
Sherrine
Phone: 0777-123915

(சி-7619)



## தேவை

யாழ் நகரில் முன் அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதிகள், சிற்றூழியர்கள் தேவை.

**நேரில் வரவும்:**
ஸ்ரீ முருகன் கொமினிக்கேசன்
303, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

(C-7621)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532



## கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல:- J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2013 ஆம் ஆண்டு 31.05.2013 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி (15.07.2014) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும்.

புதுப்பிக்கத் தவறின் 15.07.2014 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(C-7623)

இல.370, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 0214900311

உரிமையாளர்: A.S.Surendran

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை. பேராசிரியர்கள் விரைவில் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தொடர்பில் அரசுக்கு ஒருமாத காலமே அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அவகாசம் மீறப்பட்டால் ஜூலை மாதம் 10 ஆம் திகதி பாரிய வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுப்போம் என பல்கலைக்கழக பேராசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கத்தின் ஏற்பாட்டாளர் சந்திர குப்த தெனுவர கருத்து தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக பேராசிரியர்கள் தமது ஆறு கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாமையை மையப்படுத்தி கடந்த 3 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்த போராட்டமொன்றை நடத்தியிருந்தோம். இருப்பினும் இது குறித்து அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இந்நிலையில் பேராசிரியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது ஆறு கோரிக்கைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளோம்.

இதற்கமைய தமது கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றும் என எதிர் பார்க்கிறோம். இருப்பினும் அரசிற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்குகின்றோம். இந்த அவகாசத்தினை அரசு உரிய முறையில் பிரயோகப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (2)

# சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சை மும்மொழிகளிலும் நடத்த வேண்டும்

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சையை ஆங்கில மொழியில் மட்டும் நடத்தக் கூடாது, மும்மொழிகளிலும் நடத்தப்படல் வேண்டும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் அவர் தொடர்ந்து கூறு கையில்,

ஆங்கில மொழி மூலம் மட்டும் சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சை நடத்துவது தேசிய மொழிக் கொள் கைகளுக்கு புறம்பானது.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் பரீட்சை நடத்தப்பட வேண்டும். இது தொடர்பில் அமைச்சரவையை தெளிவுபடுத்த வேண்டும்.

எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டங்களின் போது சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சை குறித்து விரிவாகப் பேசப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: 17.25<br>தகைமை/தொழில்: A/L / மேற்பார்வையாளர் (கனடா PR)<br>தொ.இ: B/3234 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 3<br>கி.பா: 12.25<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, நுண்கலைப் பிரிவு - 3ஆம் வருட மாணவி<br>தொ.இ: G/3256 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா: 15.25 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L / மின் இணைப்பாளர்<br>தொ.இ: B/3238 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 17.75<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3258 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: 23 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L / சாரதி<br>தொ.இ: B/3239 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 43.25 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3259 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 50.25 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: யாழ். பல்கலைக்கழகத்தில் படித்தவர் (கொலண்ட்)<br>தொ.இ: B/3240 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 54.75 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA – Final year<br>தொ.இ: G/3263 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை முற்றுகின்றது

## அல்ஜசீரா இணையம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை- இந்திய மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினை இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில புகைச்சலை ஏற்படுத்தி இருப்பதாக அல்ஜசீரா இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற 50 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் மாதாந்தம் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுகின்றனர்.

வாராந்தம் மூன்று தினங்களுக்கு இவ்வாறு தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற நிலை யில், அவர்களை கைது செய்யாமல் என்ன செய்வது? என்று இலங்கை கடற்படையினர் கேள்வி எழுப்புகின்றனர்.

ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் இலங்கை ஜனாதிபதிக்கும்,இந்திய பிரதமருக்கும் இடையில் டில்லியில்வைத்து பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்பட்டிருந்தது.

இந்த பேச்சுவார்த்தையானது இந்த பிரச்சினை எவ்வளவு வலியது என பதை எடுத்துக் காட்டுகிறது.

எனவே இந்த விடயத்துக்கு உடனடியாக தீர்வு ஒன்றை அமுலாக்காத பட்சத்தில், அது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவைமுற்றாகசிதைத்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)


**மகாதேவ ஆச்சிரமம்**

**MAHADEVA ASHRAMAM**

Regd No: svp 104/44 Of 29.10.1976 T.P:-024 3243443

கிளிநொச்சி ஜெயந்திநகர், மகாதேவ ஆச்சிரம பொதுக்கூட்டம் 07.06.2014 இல் ஸ்ரீமத் கணேஷானந்த சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. குரு பீடாதிபதி விருப்பத்திற்கு அமைவாக நிர்வாக சபை தெரிவு நடைபெற்றது.

| | |
|---|---|
| தலைவர்:- | ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் |
| உப தலைவர்:- | திரு. ஆ.சிவநாதன் |
| செயலாளர்:- | திரு.கு.நித்தியானந்தன் |
| உப செயலாளர்:- | திரு.கு.வேணுகோபன் |
| பொருளாளர்:- | திரு.சு.சுகந்தன். |
| நிர்வாக உறுப்பினர்கள்:- | திரு. அ.நாகேந்திரம் |
| | திரு. செ. செல்வரெட்ணம் |
| | திரு.சி.சிவமோகன் |
| | திரு. வி.கிருபாகரன் |
| | திரு. அ.விஜயகுமார் |
| | திரு. க.பிரதீஸ்வரன் |
| | திரு. மு.கனகரத்தினம் |
| | திரு.த.பேரம்பலம் |
| | திரு.ச.ஸ்ரீமுருகன் |
| | திரு.ச.திரவியச்செல்வம் |

கணக்காய்வாளர்:-திலகரட்ணம் அன்கோ (கொழும்பு)

அன்பே சிவம்

ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்

குருபீடாதிபதி

(6709)


# இராசி பலன்

**11.06.2014**

(வைகாசி 28, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.51 மணிக்கு

திரயோதசி பிற்பகல் 1.06 மணிவரை

விசர்கம் பிற்பகல் 3.14 மணிவரை

இராகுகாலம் 11-52-1.22 மணிவரை

சுபநேரம் 4.22-5.52 மணிவரை

சித்தாமிர்தம் வைகாசி விசாகம்

வளவன்

**மேடம்** — கவலைகள் தீர கந்தனை வழிபடவேண்டிய நாள், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டுமுறை அலைய நேரிடலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**இடபம்** — ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவர், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** — உற்சாகமாக பணிபுரியும் நாள், உடல் நலம் சீராகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**கடகம்** — தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சிறு வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விரும்பமொன்று நிறைவேறலாம்.

**சிம்மம்** — தாய்வழி உறவினர்களால் எதிர்பாராத உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் கூடும் நாள்.

**கன்னி** — மறக்கமுடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும்.

**துலாம்** — வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்,புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** — ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும், வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் பகை அகலும்.

**தனுசு** — இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்** — முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலைகள் உருவாகலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்** — நிர்வாகத்திறமை வெளிப்படும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், மனம் மகிழும் வகையில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** — புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், எதிர்பாராத வகையில் பயணங்கள் இடம்பெறலாம், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிப்பாய்க்கு அச்சுறுத்தலாம்; முறைப்பாடு செய்தார் அவர்

இராணுவ சிப்பாய் ஒருவர் தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கூறி பொய் முறைப்பாடு செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.டி.ஏ. றொஹான் மகேஷ் தெரிவித்தார்.

அண்மையில் யாழில் தமிழ்ப் பெண்ணொருவரை இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்ட இராணுவ சிப்பாயே இவ்வாறு பொய் முறைப்பாடு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறித்த இராணுவசிப்பாய்க்கும் சிறு சண்டை ஏற்பட்டுள்ளது.

இதன்போது பெண்ணின் உறவு முறையான பெண்ணொருவர் குறித்த இராணுவ சிப்பாயை பேசியுள்ளார்.

இதனை பயன்படுத்தி இராணுவ சிப்பாய் தனக்கு இனந்தெரியாத நபர்களினால் அச்சுறுத்தல் இருப்பதை கூறி மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை மேற்கொண்டதில் குறித்த இராணுவ சிப்பாய்க்கு குடும்பப் பிரச்சினையினாலேயே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்பதுடன் அவரது உறவினராலேயே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையும் கண்டறியப்பட்டுள்ளது.

ஆகவே இதனை இனந்தெரியாதோரின் அச்சுறுத்தல் என கருத முடியாது.

இராணுவத்தினர் என்றாலும் பொய் முறைப்பாடு செய்ய முடியாது எனவும் மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (2-4)




# நுண்கலை துறையின் ஏற்பாட்டில் விரிவுரை

(யாழ்ப்பாணம்)

நுண்கலைத்துறையின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாட்குறிப்பின் மீதான எதிரொலிப்புக்கள் முறைமையின் கலை என்ற தொனிப் பொருளில் மானிடவியலாளர், பேராசிரியர் கமலா விஸ்வேஸ்வரன் விரிவுரை நிகழ்த்துகிறார். பேராசிரியர் கமலா விஸ்வேஸ்வரன் அமெரிக் காவில் ஒஸ்ரினில் உள்ள ரெக்சஸ் பல்கலைக்கழக பேராசிரியர் என் பதுடன் பல்துறைசார் ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர். இந்தியாவில் தமிழ்நாட்டிலும் குஜராத்திலும் தனது ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார் என்பதுடன் பல குறிப்பிடத்தகுந்த நூல்களையும் ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ள இவ் விரிவுரைக்கு மாணவர்கள், ஆய்வாளர்கள் அனைவரையும் வருகைதருமாறு நுண்கலைத்துறை பேராசிரியர் அ.நோ.கிருஷ்ணவேணி கேட்டுள்ளார். (அ)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வடகோவை அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் மஹோற்சவம் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப்பூசையைத் தொடர்ந்து காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும். (2)

# கலை பண்பாட்டு பெருவிழா

(கரணவாய்)

அச்சுவேலி கலை பண்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் கலை பண்பாட்டு பெருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேற்படி கலைமன்றத்தின் தலைவர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிக பீட பீடாதிபதியும் யாழ். தமிழ்ச்சங்க தலைவருமாகிய பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், வலி. வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகன் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளி கௌரவ விருந்தினர்களாக வடமாகாணக்கல்வி திணைக்கள பாடசாலைகள் சேவைகள் பணிப்பாளர் எந்திரி க.குகநேசன், கோப்பாய் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் ச.பிரேமினி மற்றும் கோப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி மிலாசினி ரோகேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-60)




# விசாக பொங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் வெற்றிலை இரத்தினம் பதியுறை ஸ்ரீ முத்துமாரி ஆலய வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கமைய 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நந்திக் கொடியேற்றத்துடன் இந்நிகழ்வு ஆரம்பமாகும்.

இப் பொங்கல் விழா நள்ளிரவு 12 மணிக்கு பொங்கல் மடைப் பண்டம் எடுத்து வழுந்து வைத்து அதிகாலை பொங்கல் விழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-29)

# பேருந்துகளின் பயண தாமதத்தால் மாணவர்கள் பாடசாலைக்கு தாமதம்

## அதிகாரிகள் கவனத்திலெடுப்பார்களா?

(பருத்தித்துறை)

பருத்தித்துறை போக்குவரத்து சாலையில் உள்ள பயன்படுத்த முடியாத பேருந்துகள் மட்டும் பாடசாலை சேவையில் தினமும் ஈடுபட்டு வருவதாக வடமராட்சி பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பேருந்துகளின் இயந்திரம் மிகவும் பழுதடைந்து பாவனைக்குதவாத நிலையில் உள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அப் பேருந்துகளே தினமும் பாடசாலை சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் இப் பேருந்துகள் பழுதுபட்டு இடைநடுவில் நிற்பதால் பாடசாலைக்கு தினமும் நேரம் தாழ்த்தி சமூகமளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக பருத்தித்துறையில் இருந்து தொண்டை மானாறு வல்வெட்டித்துறை, ஊடுக்காடு, ஊரணி சக்கோட்டை போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு சேவையில் ஈடுபடும் பேருந்துகளே இவ்வாறு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பேருந்துகள் பழுதுபட்டு இடைநிறுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அதற்கு பதில் சேவையாக வேறு பேருந்துகள் பருத்தித்துறைசாலையில் அனுப்பப்படுவதில்லை.

தினமும் இவ்வாறான நிலைமை தொடர்வதால் மாணவர்கள் 9 மணிக்கு பின் பாடசாலையை சென்றடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் மாணவர்கள் பாடசாலை அதிபரின் கண்டிப்புக்களுக்கும் தண்டனைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

இது தொடர்பில் பெற்றோர் மற்றும் மாணவர்களால் பருத்தித்துறை போக்குவரத்து சபைக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இது வரையும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே பருத்தித்துறை போக்குவரத்துச் சபை பழுதற்ற பேருந்துகளை ப்பாடசாலை சேவையில் ஈடுபடுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-10)

# கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம்

(சாவகச்சேரி)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைய தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக திருமதி சுனேந்திரா சுதாகர் நியமிக்கப்பட்டுள்ளார்.


இவர் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்று கடந்த 2 ஆம் திகதி முதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (2-29)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)


சாவகச்சேரி-கேரதீவு அருள்மிகு ஐயனார் கோவில் மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6.15 மணி தொடக்கம் 7.15 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து விஷேட பூஜைகள், ஆசியுரைகள் என்பன இடம்பெறும். (2)



பேராசிரியர் ச.தனஞ்சயராசசிங்கம் எழுதிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் கௌரவிக்கப்படுவதையும் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் தலைமையுரை நிகழ்த்துவதையும் யாழ்.உயர்கல்லூரியின் இயக்குநர் ஸ்ரீமதி அருள் நங்கை சண்முகநாதன் சிறப்புரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




### ஆதிமகா சக்தி அன்னை ஸ்ரீ சிவகாமி அம்பாளின் அற்புதங்கள்.

அன்று சிவபூமி என்று திருமூலர் அழைத்த மணி நாடாம் இலங்கை மண்ணின் யாழ். மாவட்டத்தில் சைவப் பெருமக்கள் அதிகமாக வாழும் நல்லூர் பிரதேசத்தில் கோயில்கள் அதிகமாக உள்ள இடமாகவும் நீர் வளம், நில வளம், தானியங்களும் பயிர்களும் சிறப்புற விளைகின்ற இடமாகவும் மாண்பான தெய்வீக மாட்சி நிறை தலமான கோண்டாவில் தில்லையம்பதியில் அன்னையின் திருக்கோயில் திகழ்கின்றது.

காலச்சக்கரத்தின் சுழற்சியில் பூகோளம் பல்வேறு நாகரிகங்களைக் கண்டுள்ளது. எனினும் அன்று தொடக்கம் இன்றுவரை அழியாத நாகரிகமாக இந்துக்களின் நாகரிகம் விளங்குகின்றது. அந்த வகையில் பெண் தெய்வ வழிபாடு என்பது இந்துக்களுக்கு முக்கியமானது. அன்னையாக உயிர்களை அரவணைப்பவளாக உமை அம்மை அமைந்து இருக்கின்றாள். சகல பெண் தெய்வங்களும் அந்த சக்தியின் வெவ்வேறு வடிவங்களே என்பது இந்து சமயிகளின் நம்பிக்கை. இந்த வகையில் கோண்டாவில் கிராமத்தின் மத்தியில் தில்லையம்பதியில் எழுந்தருளியிருக்கும் உமை அம்மையின் ஒரு வடிவமே ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆகும்.

அற்புதங்கள் புரிந்து அருளாட்சி காட்டும் அன்னை அவளின் நித்திய பூசகர் திருத்தொண்டர் தம்பிஐயாவின் திருவுடல் அஞ்சலிக்காக அன்னையின் ஆல் அரசு இணைந்த மரத்தருகில் வைத்த போது அவரது திருமேனி மீது அரசம் விறகு ஒன்று வீழ்ந்தது. அதனைப் பார்த்த போது மக்கள் மெய் சிலிர்த்தனர். அத்தோடு 2004 ஆம் ஆண்டு அம்பாளின் ஒலி பெருக்கி திருடப்பட்டு வேறு கிராமத்தில் விற்பனை செய்யப்பட்ட போது அது திருடியவர் யார் என்று தெரிய வர அப்பொருள் மீண்டும் திருக்கோயிலுக்கு வந்து சேர்ந்தது.

2013 ஆம் ஆண்டு சிவராத்திரிக்கு மூன்றாம் நாள் இரவு நடுநிசி ஒரு மணி அளவில் பூட்டப்பட்ட ஆலயத்தினுள் மின்சார வாத்தியம் ஒலி எழுப்பும் சத்தம் கேட்டு அயலவர்கள் எழுந்து கதவைத் திறந்து பார்த்த போது மின் ஆழி ஓய்வு நிலையில் இருந்தும் வாத்தியக் கருவி இயங்குவதை பொதுமக்கள் பார்த்து வியந்தனர். 2014 ஆம் ஆண்டு பங்குனி இலட்ச அர்ச்சனை எட்டாம் நாள் அம்பாளின் வலது கரத்தில் இருந்து விபூதி சொரிவதை பக்தர்களால் கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அன்னையின் திருக்கோயில் உட் பிரகாரத்தில் அடியவர்கள் நடமாட்டம் இல்லாத வேளைகளில் சிறு பிள்ளையின் பாதக் கொலுசுச் சத்தம் போன்ற ஒலி கேட்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது என பல பூசகர் மூலம் அறியக் கிடைத்தது.

'தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்'

### திருக்கோயில் பிரதம குருவின் ஆ

மாதேவி நீயானாய். மகேஸ்வரனின் துணையானாய். கே
கோபுர வடிவானாய். கோண்டாவில் தில்லையம்பதி புண்ணிய பிர
வடிவில் அமர்ந்திருந்து அடியவர்களுக்கு அருளை அள்ளி வழ
சிவாகமி அம்பாளுக்கு இன்று இரதோற்சவத் பெருவிழா. ஆன்மா
அடக்கி இறைவன் அன்பைப் பொழிந்து எல்லா ஜீவராசிகளுக்கும்
திருநாளில் அடியவர்கள் வடம் பிடித்து அருள் பெற வாரீர்! வாரீர்!
சர்வே ஜனாஷா சுகினோ பவந்து

*பிரம்மஸ்ரீ ந*



### தலைவரின் ஆசிச் செய்தி

மஹோற்சவத்தின் பெருமை பஞ்ச கிருத் திய
என்று சொல்லப்படுகின்ற படைத்தல், காத் த
அழித்தல்,. மறைத்தல், அருளல் என்ற வ
யிலே இறைவனுடைய ப[illegible] கிருத்தியங்[illegible]
குறிக்கின்ற விழாவாகவும் மஹோற்சவம் விளங்குகி
றது. இவ்விழாக்களில் இரத உற்ச வம் ஆன்ம
களின் மல நிவாரணம் என்று சொல்லப்படுகின்ற ஆணவம், கன்ம
மாயையை ஒடுக்கி ஆன்மாவை இறைவனிடம் இணைத்து திரு
ருளைப் பெறுவதற்கு உரிய விழாவாக இடம்பெறுகின்றது.

இவ்விழா வில் கலந்து கொள்கின்ற அனைத்து தில்லையம்பதி வா
மக்கள் அனைவரும் சுபீட்சமாகவும் நோயற்ற வாழ்வும் குறைவற்
செல்வமா கவும் வாழ்வாங்கு வாழவேண்டுமென்று இத்தருணத்தி
தில்லையம் பதி ஸ்ரீ சிவகாம சுந்தரியின் திருவடிகளை போற்றி துதி
நல்லாசி கூறி அமைகின்றேன்.

*த.ராதா, தலைவர்,*
*பரிபாலன சபை*

### தலைவரின் வாழ்த்துச்

ஆதி மகா சக்தியாம் அன்னை ஸ்ரீ சிவக
தேரில் பவனி வருகின்ற திருக் கோலக
கண்கோடி வேண்டும். இந்நாளில் சாந்
கிடைக்க அம்பாளைப் பிரார்த்திப்போமாக

*யாவும் அவள் தரு*
*க.கிருபாகரன், தலைவர் தேர்த்*
*தில்லையம்பதி.*

**புலவர் வீடியோ**
**தில்லையம்பதி,**
**கோண்டாவில்.**

**செல்லையா தயாளன்**
(France)

**காருசன் தையலகம்**
ஆண்கள், பெண்களுக்கான ஆடைகளை நவீன முறையில் தைத்துக்கொடுப்பவர்கள்.
**கோண்டாவில் வடக்கு,**
**கோண்டாவில்.**

**அமலன் வீடியோ & போட்டோ**
**இராச வீதி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**
**077 9748562, 0213001595**

**வேதா போட்டோ & வீடியோ**
**அழகுக் கலை நிலையம்,**
**தில்லையம்பதி, கோண்டாவில்.**
**தொ.பே.இ.0779488381,**
**0214925387, 0771049501**

L

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மனித புதைகுழி வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(மன்னார்)

மன்னார் மாந்தை மனிதப் புதைகுழி தொடர்பிலான வழக்கின் விசாரணைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே, மாவட்ட நீதிபதி ஆனந்தி கனகரெட்ணம் இவ்வழக்கை இவ்வாறு ஒத்தி வைத்தார்.

இதன்போது காணாமற்போனோர் சார்பில் கடந்த தடவை நீதிமன்றத்தில் சமூகமளித்திருந்த மனித வுரிமைகள் தொடர்பிலான வழக்கறிஞர்கள் செய்த விண்ணப்பத்தின் அடிப்படையில் இரண்டு அறிக்கைகளை சமர்பிக்கும்படி குற்றப்புலனாய்வு அதிகாரிகளிடம் நீதிமன்றம் கேட்டிருந்தது.

இந்த மனிதப் புதைகுழி அகழப்பட்ட இடத்தை மேலும் அகலப் படுத்துவது மற்றும் புதைகுழிக்கு அருகிலுள்ள கிணறு தோண்டப்படுவது சம்பந்தமாகவும் இந்த விண்ணப்பத்தில் கேட்கப்பட்டிருந்தது.

ஆனால் நீதிமன்றத்தில் நேற்று சமூகம் அளித்திருந்த இலங்கை குற்றப்புலனாய்வு அதிகாரிகள் இதற்கான அறிக்கை எதனையும் நீதிமன்றில் சமர்பிக்கவில்லை.

மாறாக தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்தபடி 1950 மற்றும் 1951ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் ஒரு மயானம் இருந்திருக்கலாம் என்ற ஓர் அறிக்கையை மட்டுமே குற்றப்புலனாய்வு அதி காரிகள் நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

அதனை ஊர்ஜிதம் செய்வது போலவே இலங்கை பொலிஸாரும் ஓர் அறிக்கையை நீதிமன்றில் சமர்பித்திருந்தனர்.

அதேவேளை, மன்னார் பிரதேசசபைத் தலைவரிடமிருந்து பெற்ற ஒரு கடிதத்தை காணாமற்போனோர் சார்பில் சமூகம் அளித்திருந்த மனிதவுரிமைகள் தொடர்பிலான வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பித்தனர்.

இக்கடிதத்தில் இப்பிரதேசத்தில் எந்தக் காலத்திலும் மயானமோ, இடுகாடோ இருக்கவில்லை என்று மன்னார் பிரதேசசபைத்தலைவரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து இது தொடர்பில் விரிவான அறிக்கையை சமர்பிக்குமாறு இலங்கை குற்றப்புலனாய்வு அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்துள்ள நீதிமன்றம், இவ்வழக்கின் விசாரணைகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. (2)



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு அண்மையில் யாழ்.மாவட்ட பொலிஸாரும் படையினரும் இணைந்து நடத்திய சைக்கிள் விழிப்புணர்வு ஊர்வலம் மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி யாழ். துரையப்பா விளையாட்டரங்கை சென்றடைந்த போது... (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

## சர்வதேச சுற்றுப்புறச் சூழல் தினம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையும் வேள்ட்விஷன் நிறுவனமும் இணைந்து நடத்தும் சர்வதேச சுற்றுப்புறச் சூழல்தினம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேசசபை கலாசார மண்டபத்தில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் நாகரஞ்சனி ஐங்கரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண மத்திய சுற்றாடல் அதிகாரசபை பிரதிப்பணிப்பாளர் திருமதி.விஜிதா சத்தியகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்புவிருந்தினராக வலிகாமம் மேற்கு வேள்ட்விஷன் நிறுவன முகாமையாளர் ஐ.மைக்கல், கௌரவ விருந்தினராக சங்கானைசெலான் வங்கி முகாமையாளர் அன்ரனி றூபஸ்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டுசிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்விற்கான ஆசியுரையினை சித்தன்கேணி சிவன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சபா.வாசுதேவக் குருக்கள், மூளாய் தென்னிந்திய திருச்சபையின் வண.செபஸ்ரியன் அன்ரனி ஆகியோர் வழங்குவார்கள்.

மேலும் கடல்மட்ட மாற்றம் எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா சிறப்புரையாற்றுவார். (2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 |
| தக்காளி | 180 | 180 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 |
| கோவா | 120 | 100 | 120 |
| கரட் | 180 | 160 | 160 |
| பூசணி | 70 | 80 | 80 |
| புடோல் | 70 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 180 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 |
| கிருணைக் கிழங்கு | — | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 140 | 100 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 110 | 120 | 120 |
| கறிமிளகாய் | 240 | 130 | 160 |
| முருங்கைக்காய் | 160-200 | 200 | 200 |
| போஞ்சி | 140 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-40 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 90 | 100 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 41

நிக்மல் தர்மதுரை




சர்மிலா சிவராஜா



தினு சபி





சுலக்ஷன் ரதன்




அஜந் குலசிங்கம்




பகீரதன் தனபாலசிங்கம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம் துணைவேந்தர் துரைராஜா



## 19 ஆவது சிரார்த்த தினம் இன்று

பேராசிரியர்
**வி.நித்தியானந்தம்**
பொருளியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்ட நாள் முதல் தத்தம் நிலைகளில் தனித்துவமான ஆளுமை பெற்ற துணை வேந்தர் வரிசை யொன்று அப்பல்கலைக் கழகத்தை அலங்கரித்து வந்துள்ளது.

அவர்களுள் பேராசிரியர் துரைராஜா பெற்றிருந்த ஆளுமை மற்றவர்களிலிருந்து சற்று வேறுபட்டுச் சமூக மட்டத்திலிருந்து ஊற்றெடுப்பதாய் இருந்ததெனக் கூறின் மிகை யாகாது.

இவ்வாறு கூறுவது உண்மையில் அவரது ஆளுமையின் முழு நிலைத் தன்மையை வெளிப்படுத்துகிறதெனலாம்.

ஏனெனில் அவர் ஏனைய துணைவேந்தர்களைப் போன்று தமது கல்வி,பயிற்சி என்பவற்றை பொறுத்தவரை சமூக விஞ்ஞானத் துறைசார்ந்த ஒரு வராகவன்றி விஞ்ஞானப் பிரிவின் பொறியியல் துறை நிபுணராகவும் திகழ்ந்திருந்தார்.

எனினும் அவரிடமிருந்த சமூக உணர்வும் அதனை அவர் தமது பணிகளிலும் பங்களிப்பிலும் பெயர்த்துக் கொண்ட விதமும் அவரை ஒரு தலை சிறந்த யதார்த்த பூர்வமான சமூக விஞ்ஞானி யாகப் பெயர்த்திருந்தன.

1994 ஆம் ஆண்டு நோய் வாய்ப்பட்டு அவர் சடுதியாக மறையும் வரை துணைவேந்தர் பதவியை வகித்து வந்தார். தமிழ் மக்கள் இக்கட்டான காலகட்டம் ஒன்றினூடாக சென்று கொண்டிருந்த ஒரு நேரத்தில் அவர் மறைவு மூலம் ஏற்பட்ட இழப்பு ஈழத்து மக்களைப் பொறுத்தவரை ஒரு பேரழிவாகும்.

பேராசிரியர் துரைராஜா யாழ். பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராக தம்மை யாழ்ப்பாணத்துடன் 'இணைத்துக் கொண்ட நாள் முதலான அவரது சேவையும் பங்களிப்பும் சமூக மட்டத்திலான அவரது மிளிர்விற்கு மகுடம் வைத்தாற் போல அமைந்திருந்தது.

எனினும் அவரது சமூக நோக்கும் சமூகத்தின் பங்காளனாக தன்னைப் பார்க்கும் உணர்வும் அவரது வாழ்வின் யாழ்ப்பாண பல்கலைக்கழக சகாப்தத்திற்கு மிக முன்னதாகவே அவருடன் ஊறிவிட்ட தொன்றாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அவரது சேவையின் முக்கியத்துவத்தை அப்போது நிலவியிருந்த நெருக்கடி காலப் பின்னணியைக் கருத்திற் கொள்ளும் போது தான் நன்குணர்ந்து கொள்ள முடியும். இந்திய அமைதிப் படையின் ஆக்கிரமிப்புக் காலத்தில் ஆரம்பித்த துரை ராஜாவின் சேவை முதலாவது ஈழப்போர் என்று இன்று வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படும் கால மட்டத்தினூடே நகர்ந்து சென்றிருந்தது.

சமகாலத்தில் தெற்கில் ஜே.வி.பி.தீவிரவாதிகளின் காலமட்டத்தினூடே நகர்ந்து சென்றிருந்தது. ஜே.வி.பி. கிளர்ச்சிகள் காரணமாகப் பேராதனைப் பல்கலைக்கழகம் உட்பட தெற்கிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களும் மூடப்பட வேண்டிய ஒரு சூழல் தோற்றுவிக்கப் பட்டிருந்தது.

இது யாழ்ப்பாண பல்கலைக் கழத்தினையும் ஈழப்போரை காட்டி இழுத்து மூடி விடுவதற்கான ஒரு வாய்ப்பான சூழலை உருவாக்கிவிட்டிருந்தது.

எனினும் பேராசிரியர் துரைராஜா துணைவேந்தர் என்ற வகையில் வெளிப்படுத்திய ஈடுபாடும் உறுதியும் கடமையுணர்வும் எத்துணை நெடுக்கடிகளின் மத்தியிலும் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குவதை உத்தரவாதப்படுத்தியிருந்தது.

இது விடயத்தில் கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மீறி அவர் செயற்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டென்பது நிர்வாகரீதியாக அவருடன் நெருங்கி ஒத்துழைத்தோருக்கு நன்கு தெரியும்.

ஒரு நெருக்கடி நிலையில் நிறுவனமொன்று எவ்வாறு முகாமை செய்யவேண்டுமென்பதற்கான ஒரு முன்னுதாரணமாகவே அவர் திகழ்ந்தார்.

போக்குவரத்து சேவைகள் இல்லாதிருந்த அவ்வேளையில் தமது கரவெட்டி வாசஸ்தலத்திலிருந்து ஈருருளியில் 35 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரத்தை கடந்து கடமைக்கு வந்தார்.

நெருக்கடிகால முகாமை என்பது ஒரு புறமிருக்கத் தீவிர நெருக்கடிக் காலமொன்றில் பல்கலைக்கழகத்தை எவ்வாறு விரிவுபடுத்தலாமென்பது பேராசிரியர் துரைராஜாவின் சேவை காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட விவசாயத்திட்டத்தில் நிருபணமாகின்றது.

இப்பீடம் திறக்கப்படுவதற்கான முன் ஏற்பாடுகளிலும் எடுத்த ஒரு விடயத்தை முடித்து வைப்பதிலும் மிக ஊக்கமாக நின்று வழிநடத்தினார்.

கிளிநொச்சியில் விவசாய பீடமொன்றினை உருவாக்கியும் முறிகண்டியில் பொறியியற்பீடமொன்றை அமைக்க பல்கலைக் கழக ஆணைக்குழுவிலிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொண்டமையும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தை ஆரம்பித்து வைத்தமையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தத்துறை தொழிலாளர் கல்வி, புற நிலைப் படிப்பலகு என்பவற்றை உருவாக்கியமையும் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக துணைவேந்தர் நிதியமொன்றை ஆரம்பித்தமையும் பேராசிரியர் துரைராஜாவின் எதிர்காலவியல் அடிப்படையிலான தூர நோக்கை காட்டுகின்றன.

பேராசிரியர் துரைராஜா அவர்கள் சிறந்த ஆய்வாளராகவும் விளங்கி புதிய கோட்பாட்டையும் உருவாக்கினார்.

பொறியியற்றுறை சார்ந்த சர்வதேச மாநாடுகளிலும் பங்குபற்றி தமது துறைசார் நிபுணத்துவத்தை நிறுவி நமது நாட்டிற்கு புகழீட்டித்தந்தார்.

பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை பல்வேறு மாநாடுகளில் படிப்பதற்கென இவர் எழுதியுள்ளார்.

மண்ணியல் தொடர்பான நிபுணத்துவ் ஆலோசனைகளையும் அவ்வப்போது வழங்கி வந்தார்.

பேராசிரியர் அழகையா துரைராஜா இன்றிருந்திருந்தால் அவருக்கு வயது 80. தமது ஐம்பதொன்பதாவது வயதில் 11.06.1994 இல் மறைந்தார்.

அவர் மறைந்து இருபது வருடங்கள் கடந்தும் பேராசிரியர் அழகையா துரைராஜா எனும் அவர் நாமம் இன்னும் வாழ்கிறது.

அவர் புகழ் இன்றும் மங்காச்சுடராக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

# ஐ.நாவின் விசாரணை குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கத்தயார்

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தெரிவிப்பு



**(கொழும்பு) இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை விசாரணைக்குழுவை நியமித்துள்ளமை வரவேற்கத்தக்கது. இந்தக் குழுவின் விசாரணைகளுக்குத் தேவையான சகல விதமான ஒத்துழைப்புக்களையும் வழங்கவும் தயாராகவுள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.**

விசாரணைக்குத் தேவையான சாட்சியங்களையும் ஆவணங்களையும் திரட்டும் செயற்பாடுகளை நாம் முன்னெடுப்போம்.

சாட்சியங்களின் பாதுகாப்பு தொடர்பிலும் நாம் கவனம் செலுத்துவோம் என்றும் கூட்டமைப்பு தெரிவித்தது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையீல் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுளளது.

நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த முன்னாள் பெண் நீதிபதியான டேம் சில்வியா கார்ட்ரைட் தலைமையிலான குழுவினரின் விபரங்கள் மனிதவுரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையினால் வெளியிடப்பட்ட நிலையில் குறித்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது.

அத்துடன் அவ்விசாரணைக் குழுவர்னது முன்னெடுக்கவிருக்கும் அனைத்து விதமான நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பை வழங்குவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.

யுத்தம் நிறைவடைந்து ஐந்தாண்டுகளைக் கடந்துள்ள நிலையில் தற்போதும் தமிழ் மக்களின் பூர்வீகப் பிரதேசங்களான வடக்கு, கிழக்கில் இராணுவமயமாக்கப் பட்ட நெருக்கடியான நிலைமைகளே காணப்படுகின்றன.

திட்டமிட்ட ரீதியில் தமிழ் மக்களின் குடிப்பரம்பலை மாற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. காணிச் சுவீகரிப்பு என்றபெயரில் மீள்குடியேறுவதற்கு தடைவிதிக்கப்பட்டு பூர்வீக நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. காணாமற் போனவர்கள் தொடர்பில் எந்தவிதமான தகவல்களும் வழங்கப்படாது உறவினர்கள் தொடர்ந்தும் அலைக்கழிக்கப்பட்டு வருகின்றார்கள்.

பெண்கள்,இளைஞர் யுவதிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதோடு திடீர் கைதுகளும் இடம்பெறுகின்றன. இவற்றுக்கு எதிராக குரல்கொடுப்பவர்கள் அச்சுறுத்தப்படுவதுடன் ஜனநாயக ரீதியில் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் படசத்தில் அவற்றை தடுத்து நிறுத்துவதற்கு இராணுவப் புலனாய்வாளர்கள் முழு வினைத்திறனுடன் செயற்படுகின்றார்கள்.

இவ்வாறான நிலைமையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் விசாரணையொன்று நடத்தப்பட்டு நீதி கிடைக்க வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதற்காக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவை முன்னெடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் கூட்டமைப்பு ஆதரவு வழங்குமென முன்னதாகவே அறிவித்திருந்தது. அதற்கமைவாக அண்மைய தினாங்களாக மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்திருந்தோம்.

அடுத்த கட்டமாக முன்னெடுப்பதற்கும் தயாராகி வருகின்றோம். அதேபோன்று விசாரணைகளுக்கு தேவையான சாட்சியங்கள்,ஆவணங்களை திரட்டும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவிருப்பதோடு மட்டுமன்றி சாட்சியங்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் உரிய வேலைத்திட்டங்களை மேற்கொண்டுவருகின்றோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் 13ஆவது திருத்தச் சட்டத் திற்கு அப்பால் சென்று அதிகாரபரவலாக்கத்துடனான அர்த்தமுள்ள தீர்வொன்றை முன்வைப்பதற்கு இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் பின்னடிப்புச் செய்து வரும் நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறைந்த பட்சம் நியாயமொன்று கிடைக்க வேண்டும் என்பதில் தமிழ் மக்களின் ஆணைபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது என்றார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள்மனிதவுரிமைகள கூட்டத்தொடரின் 26 ஆவது அமர்வு ஆரம்பமாகியுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 17 ஆம் திகதி பாராளுமன்றத்தின் அமர்வுகள் ஆரம்பமாகின்றன. இதன்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கூடும் பாராளுமன்றக் குழுவில் ஐ.நா கூட்டத் தொடர் பற்றிய முக்கிய விடயங்கள் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக மேலும் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

831

## நண்பன் உடையான் பகைக்கு அஞ்சான்!

ஓயாமாரிக் காடு.

அங்கே ஒரு மரத்தில் ஓர் ஆண் புறா வசித்து வந்தது.

ஒருநாள் அந்த மரத்தின் ஒரு கிளையில் புதிதாக ஒரு பெண் புறா வந்து அமர்ந்தது.

அதன் உடல் பால்போல் வெண்மையாக பிரகாசித்தது.

அதன் அழகில் மயங்கிய ஆண் புறா, "நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கலாமா?" என்று கேட்டது.

பெண் புறா தயங்கியது.

"என்னையும் நமக்குப் பிறக்கும் குழந்தைகளையும் ஆபத்து வராமல் உன்னால் காப்பாத்த முடியுமா?" என்று பெண் புறா கேட்டது.

"முடியும்" என்று ஆண் புறா நெஞ்சை நிமிர்த்திச் சொன்னது.

பெண் புறாவுக்கு நம்பிக்கை வரவில்லை.

"நாமோ புறா ஜாதி.

பஞ்சு மாதிரி மெத்துனு உடம்பு.

ஒரு ஆபத்துனா நீ உன்னையேகூட காப்பாத்திக்க முடியாதே" என்று சூழ்நிலையை விளக்கியது.

ஆண் புறா, தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டது.

அதன் ஏமாற்றத்தைக் கவனித்த பெண் புறா, ஆறுதல் கூறியது.

"எனக்கும் உன்னைக் கல்யாணம் செய்துக்க இஷ்டம்தான்.

ஒண்ணு செய்.

பலசாலியாப் பார்த்து சில நண்பர்கள் உனக்குக் கிடைச்சப்புறம் வந்து சொல்லு.

சுயமா பலம் இல்லாதவனுக்கு சிநேகிதர்களால்தான் பலம்" என்றது.

அதை ஆண் புறா ஒப்புக்கொண்டது.

ஆண் புறா இருந்த மரத்தின் கீழ்ப் பகுதியைச் சுற்றிப் புதர்க் காடு.

அதில் ஒரு காட்டுப் பூனை வசித்தது.

அருகே இருந்த குளத்தில் ஓர் ஆமை வாழ்ந்து வந்தது.

சற்றுத் தொலைவில், ஒரு குகையில் புலி இருந்தது.

இந்த மூவரையும் ஆண் புறா தினமும் பார்க்கும்.

ஆகவே, அது அவற்றிடம் சென்றது.

விடயத்தைச் சொன்னது.

அந்த விலங்குகளுக்குப் புறாவின் மீது இரக்கம் ஏற்பட்டது.

"தம்பி, நீ கவலைப் படாதே, நீ பெண் புறாவோடு வாழ்க்கை நடத்து.

ஏதாச்சும் ஆபத்து வந்தால், குரல் கொடு.

நாங்க வந்து காப்பாத்திடுறோம்" என்றன.

ஆண் புறா இந்தச் செய்தியைப் பெண் புறாவுக்குத் தெரிவித்ததும் அது சந்தோஷப்பட்டது.

இரண்டும் கூடுகட்டி ஒன்றாக வாழத் தொடங்கின.

குஞ்சுகள் பிறந்ததும் அவற்றைப் பாசத்துடன் பராமரித்தன.

ஒருநாள் அந்த வழியே சென்ற ஒரு வேடன், புறாக் குடும்பத்தைப் பார்த்தான்.

அவற்றைப் பிடித்துச்செல்ல விரும்பினான்.

அதற்காக அவன் வில்லையும் அம்புகளையும் கீழே வைத்துவிட்டு மரத்தில் ஏறத் தொடங்கினான்.

இதைப் பார்த்து புறாக்கள் கத்தின.

அதைக் கவனித்த ஆமை கரைக்கு வந்தது.

அது பெரிய ஆமை.

அது தன் முழுப் பலத்தையும் உபயோகித்து வேடனின் கால்கள் மீது மோதியது.

இரும்பு போல் உறுதியான அதன் ஓட்டின் தாக்குதலைத் தாங்க முடியாமல் வேடன் கீழே விழுந்தான்.

சமாளித்துக்கொண்டு எழுந்தவன், ஆமையை உதைத்துத் தள்ளிவிட்டு மீண்டும் மரத்தில் ஏறினான்.

அப்போது மரத்தின் அருகில் இருந்த புதரில் தூங்கிக்கொண்டு இருந்த பூனை விழித்து வெளிப்பட்டது.

மரத்தில் ஏறும் வேடனை ஒரே பாய்ச்சலில் கால்களைப் பற்றிக்கொண்டது.

தனது கூர்மையான நகங்களால் அவன் கால்களைப் பிறாண்டியது.

வேடன் கோபத்துடன் தன் பலத்தைத் திரட்டிப் பூனையை ஓங்கி உதைத்ததும், அது தொலைவில் போய் விழுந்தது.

இரண்டு முறை தோல்வி அடைந்த வேடனுக்கு வெறி ஏற்பட்டது.

"புறாக்களைப் பிடித்தே தீருவது' என்ற பிடிவாதத்துடன் மீண்டும் மரத்தில் ஏறினான்.

புறாக்கள் கூக்குரல் இட்டன.

இதைக் கேட்டு, குகை வாசலில் படுத்து இருந்த புலி பாய்ந்து வந்தது.

அது, வேடனைக் கொல்ல விரும்பவில்லை.

அவனை பயமுறுத்தி விரட்ட மட்டுமே தீர்மானித்தது.

"கிர்... கிர்...' என்று பயங்கரமாக உறுமியது.

வேடன் நடுங்கிவிட்டான்.

புறா பிடிக்கும் ஆசையைக் கைவிட்டான்.

மரத்தில் இருந்து இறங்கி ஓட்டம் பிடித்தான்.

அதேசமயம், ஆமையும் காட்டுப்பூனையும் அங்கே வந்து சேர்ந்தன.

ஆண் புறா அவற்றுக்கு நன்றி சொன்னது.



## 06.2014 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1774 - அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜியேர்சிலிருந்து பிரெஞ்சு இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி யூதர்கள் அங்கிருந்து வெளியேறினர்.
- 1788 - ரஷ்ய நாடுகாண் பயணி கெராசிம் இஸ்மாயிலொவ் அலாஸ்காவை அடைந்தார்.
- 1805 - மிச்சிகனில் டிட்ராயிட் நகரத்தின் பெரும் பகுதி தீயில் அழிந்தது.
- 1837 - பொஸ்டனில் ஆங்கிலேயர்களுக்கும் ஐரிய மக்களுக்கும் இடையில் கலவரம் மூண்டது.
- 1901 - நியூசிலாந்து தன்னுடன் குக் தீவுகளை இணைத்துக் கொண்டது.
- 1935 - அமெரிக்கக் கண்டுபிடிப்பாளரான எட்வின் ஆர்ம்ஸ்ட்ரோங் உலகின் முதலாவது தனது பண்பலை ஒலிபரப்பை நியூ ஜேர்சியில் அறிமுகப்படுத்தினார்.
- 1937 - சோவியத் ஒன்றியத்தில் எட்டு இராணுவத் தலைவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய விமானங்கள் இத்தாலியில் ஜெனோவா மற்றும் டூரின் நகர்கள் மீது குண்டுகளை வீசின.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: மால்ட்டா மீது முதற் தடவையாக இத்தாலிய விமானங்கள் தாக்குதலை நடத்தின.
- 1963 - தெற்கு வியட்நாமில் மத விடுதலையை வலியுறுத்தி திக் குவாங் டுக் என்ற பௌத்த மதகுரு தனக்குத் தானே தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டார்.
- 2002 - அன்டோனியோ மெயூச்சி என்பவரே தொலைபேசியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் என ஐக்கிய அமெரிக்கக் காங்கிரசினால் அறிவிக்கப்பட்டார்.
- 2004 - நாசாவின் கசீனி-ஹியூஜென்ஸ் விண்ணுளவி சனிக் கோளின் ஃபீபி துணைக்கோளை அண்டிச் சென்றது.

### பிறப்புகள்

- 1838 - எம். சி. சித்திலெப்பை, ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1898)
- 1908 - சோ. இளமுருகனார், ஈழத்துப் புலவர் (இ. 1975)
- 1947 - லாலு பிரசாத் யாதவ், இந்திய அரசியல்வாதி
- 1957 - சுகுமாரன், தமிழகக் கவிஞர்

### இறப்புகள்

- 1994 - அ. துரைராசா, பேராசிரியர், நாட்டுப்பற்றாளர், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பி. 1934)
- 1995 - பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழறிஞர் (பி. 1933)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**ஆறாமிடத்தில் குரு வருகை!**
**அனுசரிப்பாலே வரும் பெருமை!**
**எதை எப்பொழுது செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து வைத்திருக்கும் கும்ப இராசி நேயர்களே!**

**60/100**

## ஆறாமிடத்தில் குரு வருகை! அனுசரிப்பாலே வரும் பெருமை!

வைகாசி 30 இல் வருகிறது குருபெயர்ச்சி. இதுவரை 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்தார். இப்பொழுது 6 ஆம் இடத்திற்கு வரும் குரு பகவான், தனதுபார்வை பலத்தால் நல்ல பலன்களை அள்ளி வழங்குவார். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கடகராசியில் உச்சம்பெறும் குரு உங்கள் இராசிக்கு 2,11க்கு அதிபதியாவார். தன இலாபாதிபதியான குரு உச்சம் பெறும் பொழுது தன வரவு தாராளமாக வரவேண்டுமல்லவா? அதே நேரத்தில் இது இருக்கும் இடமோ 6ஆம் இடம் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். எனவே தொகை வந்த மறு நிமிடமே செலவாகி விடலாம். உடல் நலத்தை சீராக்கிக்கொள்ள ஒவ்வொரு நாளுமே செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகும். கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் குடும்ப பெரியவர்களைக் கேட்டுக் கலந்து ஆலோசித்துக் காரியங்களைச் செய்வதன் மூலம் வாட்டங்கள் அகலும். மாற்றுக் கருத்துடையோர் எண்ணிக்கை அதிகரிக்க விடாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

குருவின் ஆதிக்கம் 6ஆம் இடத்தில் வருகின்ற பொழுது எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் ஸ்தானம் புனிதமடைகிறது. இதுபோன்ற காலங்களில் பொறுமையைக் கடைப்பிடித்தால் பெருமை வந்து சேரும். ஒரு தொகைக்கு வரும் பொழுதே சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள்

**உபசரிப்பின் மூலம் உள்ளத்தில் இடம்பெறுபவர்!**

தனித்தன்மையோடு வாழவேண்டும் என்று விரும்புபவர்கள் நீங்கள். தர்ம சிந்தனை உங்களுக்கு உண்டு. செய்யும் தொழிலே தெய்வம் என்ற தத்துவத்தை மறவாதவர்கள் நீங்கள். சிறு குழப்பங்கள் உங்கள் மனதில் எப்பொழுதும் இடம்பெற்றுக்கொண்டிருக்கும். யாரேனும் ஒருவரது தூண்டுதல் இருந்தால் மட்டும் வெற்றிக் கனியை நீங்கள் வரவழைத்துக்கொள்ள இயலும்.

வேடிக்கையாகப் பேசும் சுபாவம் உங்களுக்கு இருப்பதால் நாடிவரும் நண்பர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். எளிமையை விரும்பும் உங்களுக்கு வலிமையான ஆயுதமாக இருப்பது பொறுமைதான். சொந்த வேலையைக் காட்டிலும் வந்த வேலைக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி தரும் பலன்களை பார்ப்போம்.

**தேவகுரு ஆறில் வந்தால்,**
**தேவைகள் பூர்த்தியாகும்!**
**ஆவல்கள் தீர வேண்டின்,**
**அனுசரிப்பும் தேவையாகும்!**
**கோபத்தை விலக்கினால்தான்,**
**குடும்பத்தில் அமைதி கூடும்!**
**தீபத்தில் குருவைக் கண்டு,**
**தரிசித்தால் நன்மை சேரும்!**
என்கிறது ஜோதிட சாஸ்திரம்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 6 இல் சஞ்சரிக்கும் குருவால் உங்கள் ஆற்றல் பளிச்சிடும். கூட்டு முயற்சியில் அடிக்கடி மாற்றம் செய்வீர்கள். குடும்ப பெரியவர்களையும் ஆன்மிகப் பெரியவர்களையும் ஆலோசித்து எடுக்கும் முடிவுகளில் வெற்றி காண்பீர்கள்.

6 ஆம் இடம் என்பது ரோக ஸ்தானமாகும். எதிர்ப்பு, வியாதி, கடன், வழக்கு, பொருள் இழப்பு, மனத்தடுமாற்றம், வீண் பழிகள், கண் நோய், மூட்டுவலிகள், பங்காளிப் பகை, பிறரிடம் உதவி கேட்கும்நிலை போன்றவற்றை அறிந்து கொள்ளும் இடமாகும். அந்த 6ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கியப் பாதிப்பு ஏற்பட்டு அகலும். மேலதிகாரிகளின் அனுசரிப்பு இக்காலத்தில் உங்களுக்குத் தேவை. வீடு மாற்றங்கள், ஒரு சிலருக்கு உருவாகி சொந்த வீடுகள் கட்டிக் குடியேறும் வாய்ப்புகள் கூட வந்து சேரும்.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

உங்கள் இராசிக்கு 2,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்கும் குரு பகவான் உச்சம் பெற்று இருக்கும் பொழுது தன வரவு தாராளமாக இருந்து கொண்டேயிருக்கும். மங்கல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். தங்கு தடைகளை அகற்றும் தனிப் பார்வை குருவிற்கு உண்டு. அப்படிப்பட்ட குருவின் பார்வை 2,10,12 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன.


**இரண்டினை குருதான் பார்த்தால்,**
**இனியதோர் வாழ்க்கை சேரும்!**
**பத்தினைக் குருதான் பார்த்தால்,**
**முத்தான தொழில்கள் வாய்க்கும்!**
**பனிரெண்டை குருதான் பார்த்தால்,**
**பயணத்தால் பலன் கிடைக்கும்!**
என்கிறது ஜோதிட சாஸ்திரம்.

குருவின் பார்வை 2 ஆம் இடத்தில் பதிவதால் இடையூறுகள் அகலும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். வரவு செலவு திருப்திகரமாக இருக்கும்.

விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். உயர்ந்த மனிதர்களின் நட்பு கிட்டும். ஒப்பற்ற குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் செயற்பாடுகளில் இருந்த சிக்கல்கள் விலகும். தொழிலில் ஏற்பட்ட தொல்லைகளைச் சமாளித்து தொகை வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள். குழந்தைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகளில் எதிர்பார்த்தபடியே வெற்றி கிடைக்கும். வேலையில் இருப்பவர்கள் தனித்துவம் தொழில் செய்ய முன்வருவர். சுய ஜாதகத்தில் தொழில் ஸ்தானம் வலுவாக இருப்பவர்கள் உத்தியோகம் நீங்கலாகத் தொழிலிலும் கவனம் செலுத்தலாம்.

சலனங்கள் அதிகரிக்கும் இந்த நேரத்தில் எடுக்கும் முடிபுகளை யோசித்துச் செய்வது நல்லது. குருவின் பார்வை அயன சயன ஸ்தானத்தில் பதிவதால் பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். தூரதேசத்திலிருந்து வரும் தகவல் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும்.

**கும்பம்**



**சஞ்சாரப் பலன்கள்**

குரு தன் சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (13.06.2014 முதல் 28.06.2014 வரை):- குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலும். தடுமாற்றங்கள் அகலும். தனவரவு தாராளமாக வந்து சேரும். இளைய சகோதரத்துடன் இணக்கம் ஏற்படும். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

சனி சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (29.06.2014 முதல் 27.08.2014 வரை):- உங்கள் இராசிநாதனாகவும் விரயாதிபதியாகவும் சனி விளங்குகிறார். எனவே, வரவும் செலவும் சமமாகும். நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். அரைகுறையாக பல பணிகள் நிற்கும். இன்றைக்கு ஒரு ஊர், நாளைக்கு ஒரு ஊர் என்று சிந்தையில் கலக்கத்தோடு சென்று கொண்டிருப்பீர்கள். விரும்பிய பொருட்களை விரும்பிய நேரத்தில் வாங்கி மகிழ்வது நல்லது. இல்லையேல் வீண் விரயத்திற்கு ஆளாக நேரிடும். எதைச் செய்தாலும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாக வழிபாட்டில் கவனம் செலுத்துவது நல்லது.

குரு புதன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (28.08.2014 முதல் 02.12.2014 வரை):- புதன் உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாகிறார். எனவே, பிள்ளைகளால் பெருமை வந்துசேரும். நிரந்தர வருமானத்திற்கு வழி பிறக்கும். முன்னோர் வழிச் சொத்தில் முறையாக லாபம் கிடைக்கும். சஞ்சலங்கள் தீரும். சந்தோஷங்கள் சேரும். பிறருக்கு ஜாமீன் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்துசேரும். குடும்ப நலன் கருதி முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள். கடன் பிரச்சினை கட்டுக்கு அடங்கியிருக்கும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிபிற்கு வரும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**


சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பௌர்ணமி அன்று கிரிவலம் வருவதன் மூலம் மகத்துவம் காணலாம். யோக பலம் பெற்ற நாளில் அமிர்தகடேஸ்வரர் அபிராமி அம்மனை வழிபட்டு வருவது நல்லது.

**கும்ப இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். குடும்பத்திற்குத் தேவையான- அத்தியாவசியப்பொருட்களை வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். சேமிப்பு உயரும். செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குடும்பப் பெரியவர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். குருவின் வக்ர காலத்தில் பண நெருக்கடிகள் அதிகரிக்கும். உறவினர் பகை உருவாகும். நீங்கள் நன்மை செய்தாலும் அது தீமையாகக் காட்சியளிக்கும். பிள்ளைகளுக்கு வரன் பார்ப்பவர்கள் மகிழ்ச்சியடையும் விதத்தில் நல்ல வரன்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். விரும்பும் விதத்தில் பொறுப்புக்களும் பதவிகளும் வந்துசேரலாம். ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். குலதெய்வ வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குருபகவான் 03.12.2014 முதல் 21.12.2014 வரை மக நட்சத்திரக்காலில் அதிசாரமாகச் செல்கிறார். டிசம்பர் 17 முதல் சிம்மத்தில் வக்ர கதியில் இருக்கிறார். தொடர்ந்து 14.04.2015 வரை வக்ர கதியில் சஞ்சரிக்கிறார். இந்த வக்ர காலத்தில் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. தன இலாபாதிபதி வக்ரம் பெறுவது நல்லதல்ல. பணவரவில் தடைகள், நெருக்கடிகள் நீடிக்கும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடும். எதிரிகளின் பலம் கூடும் இந்த நேரத்தில் உதிரி வருமானங்களும்கூடலாம். உள்ளத்தில் அமைதி கிடைக்க, ஒவ்வொரு நாளும் குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. முல்லைப்பூ மாலை அணிவித்தால் எல்லையில்லாத நற்பலன்கள் கிடைக்கும். இக்காலத்தில் சொல்லைச் செயலாக்கிக் காட்ட இயலாது. தொல்லைகள் அதிகரிக்கும். நல்லவர்கள் என்று நம்பி சேர்த்த கூட்டாளிகள் பகைவர்களாக மாறுவர். வில்லிலிருந்து வரும் அம்பு போல வேகமும் கோபமும் அதிகரிக்கும். வக்ர காலத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பதன் மூலம் வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள இயலும்.



குருப் பெயர்ச்சி நேர ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| | சுக்ரன் கேது | சூரியன் புதன் (வ) | |
| | குருப்பெயர்ச்சி 13-6-2014 | | வியாழன் |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | செவ்வாய் |

**சுப ஸ்ரீ ஜெய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.06.2014 மாலை 06.03 மணிக்கு புனர்பூசம் நட்சத்திரம் 4 ஆம் பாதத்தில் கடக இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். இந்த வீடு குருவிற்கு உச்ச வீடாகும்.**

**குருவின் வக்ர காலம்**

- **13.06.2014 முதல் 28.06.2014 வரை புனர்பூசம் 4 இல் நட்சத்திரக்காலில் குரு (தனது சாரம்)**
- **29.06.2014 முதல் 27.08.2014 வரை பூசம் நட்சத்திரக்காலில் குரு (சனி சாரம்)**
- **28.08.2014 முதல் 02.12.2014 வரை ஆயிலியம் நட்சத்திரக்காலில் குரு (புதன் சாரம்)**
- **13.12.2014 முதல் 21.12.2014 வரை மகம் நட்சத்திரக்காலில் குரு அதிசாரமாகச் செல்கிறார்**
- **17.12.2014 முதல் 21.12.2014 வரை கேது சாரத்தில் குரு வக்ர கதி**
- **22.12.2014 முதல் 14.04.2015 வரை ஆயிலியம் நட்சத்திரக்காலில் புதன் சாரத்தில் வக்ர கதியில் குரு செல்கிறார்**
- **15.04.2015 முதல் 04.07.2015 வரை ஆயிலியம் நட்சத்திரம் புதன் சாரத்தில் நேர்கதியில் குரு செல்கிறார்**
- **05.07.2015 அன்று குரு சிம்ம இராசியில் பிரவேசிக்கிறார்.**

**கணித்தவர்:-**
**சிவல்புரி சிங்காரம்**


**நாளை மீனம்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீராவியடி ஜெய வீரகத்தி
# ஆலய இரதோற்சவ சிறப்பும

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச்செய்தி



யாழ்ப்பாணம், நீராவியடி வீரகத்தி விநாயகர் கோயிலில் இன்று தேர்த்திருவிழா. மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும். ஆகவே இன்று மாபாதகச் செயல்களையெல்லாம் அழித்தொழிப்பதற்காக விநாயகப் பெருமான் இரதத்திலே ஆரோகணிக்கின்றான்.வினை தீர்க்கும் விநாயகன் இங்கு அருளாட்சி புரியும் அழகே தனி. நாம் எந்தக் காரியம் தொடங்கினாலும் முதலிலே விநாயகப் பெருமானை வணங்கித்தான் ஆரம்பிக்கின்றோம். அந்த வகையில் இன்று தேரேறி வருகின்ற நீராவிப் பிள்ளையாரை உளமாரப் பிரார்த்தித்து வணங்கி அடியார்கள் அனைவருக்கும் ஆனந்தமயமான மங்கள நல்வாழ்வை அருளவேண்டுமென்று அருளாசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வாழ்க்கையில் வருகின்ற துன்ப துயரங்களையும் கஷ்ட நஷ்டங்களையும் வேரோடு களைந்து தேரேறி வந்து அருள்பாலிக்க வேண்டுமென்று கணபதியைக் கைதொழுது ஆசி வழங்கி வாழ்த்துகின்றோம். இவ்வளவு நாளும் பட்ட வேதனைகளை மாற்றி இனி சாதனை புரிய திருவருள்புரியும் வண்ணம் விநாயகர் திருவடிகளைப் பணிகின்றோம்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், நல்லை ஆதீன முதல்வர், இரண்டாவது குரு மஹா சந்நிதானம்,நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## அற்புதங்கள் நிகழ்த்தும் வீரகத்தி விநாயகர்



இந்த உலகத்தைப் படைத்து அதன் மாறா விதிகளுக்கமைய இயக்கிக் கொண்டிருக்கும் எல்லையற்ற அந்த அந்தப் பிரபஞ்ச சக்தி பெரும் கருணை கொண்டு இறைசக்தியாய் எல்லா உயிர்களுக்கும் பேரருளை அள்ளி வழங்குகின்றது. அவ் வகையில் ஈழ மணித் திருநாட்டில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நீராவியடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் எனும் திருநாமம் கொண்டு இறை பக்தர்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் அள்ளி வழங்குகின்றார். இவ் வகையில் 02/06/2014 அன்று காலை 10.30 மணியளவில் தாணு மகாதேவக் குருக்கள், கதிரமலை சர்வேஸ்வரக் குருக்கள் போன்ற மகான்களின் அருளாசியுடன் கொடியேற்றத்துடன் ஆரம்பமான மகோற்சவம் ஆலயத்தின் ஆதியின வம்சாவழியில் வந்தோர்களான இரகுநாத முதலியார் தம்பதிகளின் ஆசாரமான ஆலய பரிபாலனமும் ஆகம நெறி தவறாத கிரிகைகளும் ஆலய திருவருட் சக்தியைப் பெருக்கிப் பலபல அற்புதங்களை நிகழ்த்துகின்றது.

அதன்படி பத்தாம்நாள் இரதோற்சவத்தில் சம்கார மூர்த்தியாக எம் பெருமான் ஆணவ, கன்ம, மாயா மலங்களை அழித்து ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டு இரதபவனி வருகின்றார். எம்மை எல்லாம் காத்து ரட்சிக்கும் எம்பெருமான் மென்மேலும் சகல சௌபாக்கியங்களையும் பக்தர்களுக்கு அளிக்க வேண்டும் என பிரார்த்தனை செய்து ஆசி கூறுகின்றோம்.

**அன்பே சிவம்**

**சிவஸ்ரீ உதயகாந்த குருக்கள்**
**மஹோற்சவ பிரதம குரு.**

## வாழ்த்துரை

*திருவாக்கும் செய்கருமம் கைகூடும்- செஞ்சொல்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும்*
*உருவாக்கும் ஆதலால் வானோரும்- ஆனைமுகத்தானை*
*காதலால் கூப்புவர் தம் கை.*

சிவத்தமிழ் பூமியாம் யாழ்.புண்ணிய பூமியில் நீர்வாவியடித் திருத்தலத்தில் அருள்மிகு ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயம் அமையப் பெற்றுள்ளது இறைவன் திருவருளேயாகும். வேதசிவாகம முறைப்படி அமைக்கப்பெற்ற இத்திருத்தலம் ஆசார முறைப்படி பரிபாலிக்கப் பெற்று வருவது போற்றத்தக்கதாகும்.

ஈழத்துச் சித்தர் பரம்பரையின் ஆதிமுதற் குருவான கடையிற் சுவாமிகள் தமது இறுதிக் காலத்தின் இரண்டு வருடங்கள் நீர்வாவியடியிலேயே தங்கியிருந்தார். கடையிற் சுவாமிகளும் அவருடைய சீடர்களும் தினமும் காலை வேளையில் ஜெய வீரகத்தி விநாயகரை வணங்கி தமது அன்றாட கடமைகளை ஆரம்பிப்பது வழக்கமாக இருந்தது.

இவ்வாறு சித்தர் பெருமக்கள் வணங்கி அருள் ஆசி பெற்ற இத் திருத்தலத்தின் மகிமை வார்த்தைகளில் அடங்கா பெருமைக்குரியது.

சித்தர்களுக்கு அருளாசி புரிந்த ஜெய வீரகத்தி விநாயகப் பெருமானின் திருத்தேரின் வடம் பிடித்து திருவிழா நடத்தி எல்லாம் வல்ல வேழமுகத்து விநாயகப் பெருமானின் அருளாசியைப் பெற்று பேரானந்த வாழ்வு பெறுவோமாக.

வாலாம்பிகா சமேத வைத்தியநாத பெருமான்
தேவஸ்தானம்
கடையிற் சுவாமியார் கோயில்
சிவனடியார்கள்.

## ஆசிச்செய்தி



விநாயகப் பெருமானை வழிபடாமல் எந்த மங்கல காரியமும் செய்யப்படுவதில்லை. மங்கல காரியங்களில் வருகின்ற விக்கினங்களை விலக்குபவரும் தேவர் கூட்டத்திற்கு தலைவருமான கணபதிப்பெருமான் அறிஞர்களுக்குள் பேரறிஞராவார். ஒப்பற்ற புகழ் படைத்தவர், முதன்மையானவர்களுள் தலைசிறந்தவர், வேதங்களுக்கு நாயகர். இவ்வாறான பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்டிருக்கின்ற விநாயகப் பெருமான் இன்று யாழ்ப்பாணம் நீராவியடியில் ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி ஆலயத்திலிருந்து அடியார்களின் உள்ளத்திலிருக்கின்ற காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலான பகைவர்களை அழித்து ஞானத்தை வழங்கி அருள்பாலிக்கும் பொருட்டு சித்திரத்தேரேறி வருகின்றார். இந்நன்னாளில் அனைவரும் ஸ்ரீஜெயவீரகத்தி விநாயகரை வழிபட்டு இஷ்ட சித்திகளை பெற்றுய்ய எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகரையும் பூஜ்ய குருதேவர் ஸ்வாமி சின்மயாணந்தரையும் ஆசிவேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**பிரமச்சாரி சிவேந்திர சைதன்யா, வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.**

## தேரேறி வரும் நீராவியடி வீரகத்தி விநாயகர்



சைவமும் தமிழும் தழைத்து உயர்ந்தோங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மையத்தில் இருக்கிறது நீராவியடி. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புக்களும் கொண்ட வீரகத்தி விநாயகர் நீராவியடியின் நடுவில் அமர்ந்திருக்கிறார். இந்தியாவிலுள்ள வேதாரண்யத்தில் இருந்து வந்து செல்வம் செல்வாக்குடன் பெரும்நிலக்கிழாராக விளங்கிய சிறாப்பர் குடும்பத்தினரே நீராவியடியில் குடியேறி வீரகத்தி விநாயகர் கோவிலையும் நிறுவி அருகில் ஒரு கேணியையும் வெட்டுவித்தனர்.சிறிய கோயிலாயினும் மூன்று காலப்பூஜைகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. விசேட தினங்கள் கொண்டாடப்பட்டன. 10 நாட்கள் அலங்காரத் திருவிழாக்கள் வருடந்தோறும் தவறாமல் நடைபெற்றன.

முதலில் நிறுவப்பட்ட கோவிலானாலும் அது ஒழுங்காக நடைபெற்று வந்தமையாலும் வீரகத்தி விநாயகர் நீரா வியடி வாழ்மக்களது குலதெய்வமாக விளங்கி வருகிறார். சிறாப்பர் குடும்பத்தினர் வேறு பல நல்ல காரியங்களுக்கும் வாரி வழங்கியிருக்கின்றனர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி ஆகியன நீராவியடியிலேயே நிறுவப்பட்டுள்ளன. அக்கல்லூரிகள் தொடங்குவதற்குக் காரணமாய் இருந்தது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாகும். அந்தச் சபையின் கட்டடம், இப்பொழுது அமைந்துள்ள இடம், சிறாப்பர் குடும்பத்தினர் வழங்கிய காணியாகும். சம்பந்தநாத முதலியாரே சிறாப்பர் குடும்பத்தின் கடைசி ஆண் வாரிசாவார். அவரது மரணத்தின்பின் அக்குடும்பத்தின் பெண் வாரிசுகளின் குடும்பத்தினரும் கோவிலுக்கு உரித்துடையவராயினர். எல்லோருக்கும் பொதுவாக அவரது ஒரு மருமகனான இரகுநாதமுதலியாரே கோவிலை நிர்வகித்து வருகிறார். அவரும் அவரது பாரியாருமான சாந்தாவும் பல மண்டபங்களையும் முகப்பில் ஒரு அழகான கோபுரத்தையும் கட்டி கோவிலை மேலும் அழகுபடுத்தியுள்ளனர். இலக்கியப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதால்தான் கோவில் பக்கம் அதிகம் போவதில்லை. எனது மைத்துனர் இரகுநாதமுதலியாரையும் அவரது பாரியாரையும் சந்திக்கும் பொழுதெல்லாம் அவர்கள் செய்யும் நற்பணிகளுக்காக அவர்களைப் பாராட்டுவேன். இப்பொழுது பெரிய தேர்முட்டியையும் கட்டி அழகிய தேர் ஒன்றையும் செய்வித்திருக்கிறார் இரகுநாதன். வீரகத்தி விநாயகர் வருடம் வருடம் தேரேறி வருகிறார். அவர் எங்களுக்கு மேலும் அருள்பாலிக்க வேண்டும் என்று வேண்டுவோமாக!

**கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.**

## வாழ்த்துச்செய்தி



பண்டைக்காலம் முதல் சைவமும் தமிழும் தழைத்து ஓங்கிய புண்ணிய பூமி வண்ணார்பண்ணை நான்கு திசைகளிலும் பிரபல சைவ ஆலயங்களின் மணி ஓசைகள் கேட்கும் பாக்கியம் பெற்றுப் பக்தி மணம் கமழும் இடம் வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள நீராவியடி ஆகும். வேதாரண்யத்தில் ஸ்ரீ இராம பிரான் இராவணனைக் கொன்றதனால் அவரைப் பீடித்த வீரகத்தி என்னும் தோஷத்தை உதைத்துத் தள்ளி அத் தோஷத்தை நீக்கிய வீரகத்தி விநாயகர் பக்தர்களுக்கு அருளாசி வழங்கிக் கொண்டு இருக்கின்றார். வேதாரணியம் வழி இங்கு வந்து குடியேறிய பூலோக முதலியார் பரம்பரையினர் தங்கள் குல தெய்வம் வேதாரணியம் வீரகத்தி விநாயகரையும் அழைத்து வந்து இங்கு பிரதிஷ்டை செய்து வழிபாடாற்றி வருகின்றார்கள். இப்பரம்பரையில் வந்த செல்லம்மா வைத்திலிங்கம் தான் பரிபாலித்த வீரகத்தி விநாயகருக்கு அழகான புதிய ஆலயம், அழகான மண்டபங்களுடனும், இராஜகோபுரத்துடனும் அத்துடன் அலங்காரத் திருவிழாக்கள் கொடி யேறி நடைபெறும் மஹோற்சவமாகப் பரிணமிக்க வேண்டும் என விரும்பினார்கள். அவர்களது கனவு நனவாகிச் சென்ற ஆண்டு முதல் கொடியேற்றத்துடன் அழகான சித்திரத்திருத்தேரில் நீராவிப் பிள்ளையார் பவனி வந்து அடியார்கட்கு அருளாசி வழங்குகின்றார். அழகிய சித்திரத் திருத்தேரில் ஆரோகணித்துப் பவனி வந்து பக்தர்கட்கு அருள் மழை பொழியும் அற்புதத் திருக்காட்சியைக் கண்டு மனம் ஒன்றிப் பிரார்த்தனை செய்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வார்களாக.

**சி.உருத்திரலிங்கம், நல்லூர்**

## யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் ஆசிச்செய்தி



பழைமையும், பெருமையும் பொருந்திய சைவ சமயத்தின் முதற்கடவுள் விநா யகப் பெருமானின் புகழ்மிக்க ஆலயமான ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை சிறப்பாக நடத்தி வருவதற்கு வாழ்த்துக் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.சமுதாயத்தில் சமய, சமூக விழுமியங்கள் அழிந்து போகாமல் பேணும் வகையில் பாரம்பரிய சம்பிரதாயங்களுடன் வருடாந்த மஹோற்சவங்களை நடத்தி வரும் இவ்வாலய பரிபாலன சபையினருக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, இவ்வாலய மஹோற்சவங்கள் வருடந்தோறும் சிறப்பாக நடைபெறுவதற்கு அருள்மிகு விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செ.பிரணவநாதன், மாநகர ஆணையாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...தி விநாயகர் ...மலர் -11.06.2014

## ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வரலாற்றுக் குறிப்புக்கள்

கர்ண பரம்பரைச் செய்திகளின்படி ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்இந்தியா காரைக்காலில் இருந்து வேதாரண்யம் வழியாக நீராவிப் பதியில் குடியேறிய பெரும் நிலக்கிழாரும் வணிகருமான பூதர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. அவர் வரும்போது தமது குலதெய்வமான திருமறைக்காடு இராவணனைக் கொன்றதனால் ஸ்ரீ இராமபிரானை பீடித்த பிரம்மகத்தியை உதைத்து நீக்கிய வீரகத்தி விநாயகரையும் தம்முடன் கொணர்ந்து தமது இல்லத்திற்குப் பக்கத்தில் மண் குடிசையில் ஸ்தாபித்தார்.ஒல்லாந்தர் அரசில் திறைச்சேரித் தலைவராக இருந்த பூதரின் மகன் பூலோக முதலியார் தனதும் தனது பிற் சந்ததியினரதும் ஊர்ப் பொதுமக்களினதும் ஆன்மலாபம் கருதி தனது குலகுருமார்களான வேதாரண்யக் குருக்களை வேதாரண்யத்தில் இருந்து வரவழைத்து தமது வீட்டின் பக்கத்தில் அவர்கள் வசிக்கக் காணி கொடுத்து அவர்களையும் நன்கு பராமரித்து வந்தார். அவருக்குப் பின் அவர் பௌத்திரன் சிவகுருநாத முதலியாராலும் அவருக்குப்பின் ஆங்கில அரசில் கச்சேரியில் சிறாப்பராகக் கடமை ஆற்றிய Gate Mudaliar (இராசவாசல்) இரகுநாத முதலியாராலும் இவ்வாலயம் பராமரிக்கப்பட்டது. இவர் காலத்தில் ஓலையால் வேயப்பட்ட ஆலயம் தீக்கிரையாக அவர் செங்கட்டிகளாலும் சுண்ணாம்பாலும் இவ்வாலயத்தைக் கட்டுவித்தார்.

அவருக்குப்பின் அவர் மகன் சம்பந்தநாத முதலியாராலும் அவருக்குப்பின் அவர் மக்களாலும் இவ்வாலயம் பராமரிக்கப்பட்டது. அம்மக்கள் காலத்தில் இவ்வாலயத்தின் கருவறை, அர்த்தமண்டபம், சண்டேஸ்வரர் சந்நிதி என்பன வெள் ளைக் கற்களால் கட்டப்பட்டன. கடைசி மகன் இராமநாத முதலியாரின் மகன் சம்பந்தநாதர் ஆலயத்திற்கு மணிக்கோபுரம் அமைப்பித்தார். இரண்டாவது மகன் இரகுநாத முதலியார் மகன் (சம்பந்தநாதருடைய ஒன்றுவிட்ட சகோதரி) [illegible]லம்மா [illegible]ந்திலிங்கம் ஆலயப் பொறுப்பை ஏற்றதும் தமது காணி சுமார் ஐம்பது பரப்பை ஆலயத்துக்கே கொடுத்துவிட்டார். அவர் விருப்பை நிறைவேற்ற அக்காணிகளை விற்று நீராவிப் பிள்ளையாருக்கு அழகிய சொக்கட்டான் மண்டபம், திருவாசி மண்டபம், வசந்தமண்டபம்,ஐந்து நிலை இராஜகோபுரம், சுற்று மண்டபங்கள் என்பன கட்டப் பட்டன. செல்லம்மாவின் தம்பியார் சம்பந்தநாதர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அலங்காரத்திருவிழா இன்று அவர் மருமகன் இரகுநாத முதலியார் காலத்தில் கொடிமரம்,தேர் என்பன அமைக்கப்பட்டு மஹோற்சவமாக வளர்ந்துள்ளது.


அனுசரணை

KUDDYTHAMBY FAMILY
INSEL STR , BASEL, SWITZERLAND
0094 778872828, 0094713833383
kuddythambyfamily@gmail.com


## வாழ்த்துச் செய்தி



ஆலயங்களில் இடம்பெறும் விழாக்கள் மஹோற்சவம் எனப்படுகின்றன. பஞ்ச கிருத்திய உண்மை களைப் புலப்படுத்தும் இவ் விழாக்களில் இரதோற்சவம் (தேர்த்திருவிழா) சங்காரம் (அழித்தல்) உயிர்களை இளைப்பாற்றுவதற்குச் செய்யும் பேரருட் செயல் என்ற தத்துவத்தை தெரிவிக்கின்றது. தேர்த்திருவிழா சிவபெருமான் திரிபுரதகனம் செய்தருளிய நிகழ்ச்சியைப் புலப்படுத்துகின்றது. இந்த உடம்பு ஒப்பற்ற ஒரு தேர். உயிர் உடம்பை இயக்கிக் கொண்டு இருக்கின்றது. உடல் வெறும் சடம். உடலாகிய தேரை இயக்குவது உயிர் என்பதை உடல் அறிவது இல்லை. உயிரும் உண்மையில் ஒரு தேர். உயிர்க்கு உயிராகிய இறைவன் உயிராகிய தேரில் வீற்றிருந்து இயக்குகின்றான். இந்தப் பூமியும் இறைவனுக்கு ஒரு தேர். இந்த உண்மைகளை உண்பவர்களுக்கு ஞான நிலை சித்திக்கும்.

பிரபஞ்சத்தின் உள்ளேயும் வெளியேயும் நின்று அதனைப் படைத்து காத்து அழித்து மறைத்து அருளும் இறைவனின் திருவருட் தரிசனத்தை பக்தர்கள் கண்டு இன்புறும் நாள் தேர்த்திருவிழா ஆகும். திருவி ழாக் காலத்தில் இறைவன் தம்பம் (கொடிமரம்), விம்பம் (மூர்த்தியின் திருவுருவம்), கும்பம் ஆகிய மூன்று இடங்களிலும் வெளிப்பட்டு அருள் செய்வான். திரு வருளைப்பெறும் அடியவர்கள் சிவவிளக்கம் பெற்று ஆன்மீகத்தில் சிறோங்கி வாழ்வார்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய பதங்களில் நிற்போர் அவ்வப் பதங்களுக்குரிய பேறுகளைப் பெறுவார்கள். ஏனையோரும் அவரவர் பக்தியின் அளவிற்கு ஏற்ப திருவருள் நலன் பெற்றுச் சிவநெறியில் நிற்பார்கள். பக்குவம் அடைந்த ஆன்மாக்களை இறைவன் முக்தியில் சேர்க்கின்றார். சென்ற ஆண்டு புதிதாக அமைக்கப் பெற்ற சித்திரத் திருத்தேரில் நீராவி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் பவனி வந்து தன் பக்தர்கட்டு அருளாசி வழங்கியதை இன்றும் அவர் பக்தர்கள் பெருமையாகச் சொல்லி மகிழ்வதைக் காணலாம்.திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் பல்வகைத் தத்துவ நுட்பங்களைக் உள்ளுறையாகக் கொண்டவை. இந்த ஆண்டும் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயப் பெருமானைச் சித்திரத் திருத்தேரில் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று எங்கள் வாழ்க்கையை வளம் பெறச் செய்வோமாக.

வை. இரகுநாதமுதலியார்
ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர், நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்.

## நீராவி வீரகத்தி விநாயகரே! தேரேறி வருக!



யாழ்ப்பாணம், நீராவிபதியுறையும் வீரகத்தி விநாயகப்பெருமான் இன்று தேரிலே ஆரோகணிக்கிறார். தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாத விநாயகன் கணங்களுக்கெல்லாம் பதியாக விளங்கி கணபதியாக வந்து வழிபடும் அடியார்களின் வினைபோக்கி அருள்புரிய இன்று சித்திரத்தேரிலே சிங்காரப் பவனி வருகின்றார்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்துவரும் என்ற வகையில் நீராவிப் பிள்ளையார் வேரோடு வினை நீக்கி எம்மைச் சீரோடும் சிறப்போடும் வாழவைக்க அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிக்க இன்று இரதபவனி வருகின்றார். நீராவி வீரகத்தி விநாயகரே! தேரேறி வந்து வடம்பிடித்து இழுக்கும் பெரும்பாக்கியத்தை இன்று தந்தருள் புரிந்தீரே! எல்லோருக்கும் நல்வாழ்வையருள வேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த்தி வணங்குகின்றோம். பாதார விந்தங்களைத் தொழுதோம். ஆதாரமாயிருந்து அருள்புரிய வேண்டுகின்றோம்.

கலாபூஷணம் தெய்வத்தமிழ்ச்சுடர் இராசையா ஸ்ரீதரன், நல்லை ஆதீன [illegible]

## நீராவி ஜெய வீரகத்தி விநாயகர் இன்று தேரேறி வருகிறார்.




திருவிழாக்களிலே முதன்மை பெறுவது தேர்த்திருவிழாவாகும். எமது உடலையும் உள்ளத்தையும்தூய்மை பெறச்செய்து இறைவனிடத்தில் லயிக்கச்செய்வதும் இரதோற்சவ திருவிழாவாகும். **ஊர் கூடித் தேர் இழுத்தல்** சமய சமூக ஒற்றுமையைக் குறித்து நிற்கின்றது. எமது பண்பாட்டு சின்னங்களை விளக்கும் வகையில் தேரில் பல கலைகளும் காணப்படுகின்றன.மஹோற்சவத்தின் சிகரமாகத் திகழும் தேர்த்திருவிழா வான இன்று ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமான் அழகிய தேரில் எழுந்தருளி வரும் கண்கொள்ளாக் காட் சியை அனை வரும் கண்டு விநாயகப் பெருமானின் அருளினைப் பெற தேரின் வடம் பிடித்திடுவோம். மேலும் இவ்வா லயத்தின் பணிகளை திறம்படச் செய்து கொண்டிருக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் வீரகத்தி விநாயக ரின் அருட்கடாட்சம் என்றும் நிலைத்திருக்கவும் அவர்களின் பணி தொடரவும் மனமார வாழ்த்துகின்றோம்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்

குட்டித்தம்பி குடும்பம்.

## நற்குஞ்சரக் கன்று நண்ணில்



கலை ஞானம் கற்கும் சரக்கன்றுகாண் என்பது சிவஞான போதத்தின் காப்புச் செய்யுள். அந்த வகையில் இறைவனுடைய எண்ணிறைந்த செய்கைகளில் ஒன்று தன்னை வணங்கும் அடியவர்களுக்கு வரும் துன்பங்களை போக்குதல் ஆகும். அவ்வாறே யாழ்ப்பாணம் நீராவியடியில் கோயில் கொண்டு தன்னை விரும்பி வந்து வழிபடுகின்ற அடியவர்களின் வினைகளையெல்லாம் அவர் விரும்பி உறைகின்ற இடமான நீராவியடி குளக்கரையில் இருந்து நீக்கி வைக்கும் பெருமானாக ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகப் பெருமான் விளங்குகின்றார். ஆன்மாக்களாகிய நாமெல்லாம் இகபர சாதனங்களைப் பெற்று செய்யும் கிரிகைகள் விக்கினமின்றி இனிது சித்திக்கும் பொருட்டு முதலிற் பூசிக்கப்படுபவர். விநாயகர் பெருமானாக 2013 ஆம் ஆண்டு மஹோற்சவத்தில் முதலாவது தேரில் வருகை தந்த பெருமான் 2014 ஆம் ஆண்டான இன்று இரண்டாவது வருடமான நீராவியடி பதியில் தேரில் ஆரோகணித்து வருகின்ற அற்புதக்காட்சி இன்று நடைபெறுகின்றது. தேர்த்திருவிழா என்றால் அஞ்ஞான ஒளியை அழித்து மெய்ஞ்ஞான ஒளியைத் தருகின்ற விழாவாக காணப் படுகின்றது.

வாரீர் வாரீர் ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகப் பெருமானின் அருளைப் பெறுவீர்களாக.

ஆசிரியர் திரு.செ.லோகேஸ்வரன்

## வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் தழைத் தோங்கும் யாழ்ப்பாண மண்ணிலே வீதிகள் தோறும் நிறைந்திருக்கும் ஆலயங்கள் மண்ணுக்கே மணிம்குடம் சூட்டுவனவாய் அமைந்துள்ளன. முழுமுதற் தெய்வமாம் விநாயகப் பெருமானுக்கு விழாக்காணும் தலங்களில் நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயமும் ஒன்று. ஐந்தொழில்களில் ஒன்றான அழித்தலைக் குறிக்கும் விதமாக தேரேறி இறைவன் வீதியுலா வரும் தேர்த்திருவிழா சிவபெருமான் தேரேறிச் சென்று அசுரர்களின் மூன்று நகரங்களை அழித்து தேவர்களைக் காப்பாற்றியமையை நினைவுபடுத்துவது மட்டுமல்லாமல் மஹோற்சவங்களில் சிறப்புக்குரியதாகவும் திகழ்கிறது. விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமானை வணங்கி எந்தச் செயலைத் தொடங்கினாலும் தன்னம்பிக்கையுடனும் வெற்றிகரமாகவும் எதிர்பார்த்த பலனை அடையும் வண்ணம் செவ்வனே செய்து முடிக்கலாம் என்பது சைவ சமயத்தவராகிய எமது ஆழ்ந்த நம்பிக்கை. யானை முகமும் மனித உடலுமாகக் காட்சி அளிக்கும் விநாயகர் பல்வேறு வடிவங்களிலும் கோவில்களில் காட்சியளிக்கிறார். அந்த வகையில் நர்த்தன விநாயகர், சயன விநாயகர், சித்தி புத்தி விநாயகர், ஆனைமுகன் என பல வடிவங்களிலும் காட்சி அளிப்பவன் நாவலர் பெருமான் வளர்த்த தெய்வீகச் சூழலாம் வண்ணார் பண்ணை நீராவிய்டியில் வீரகத்தி விநாயகராக காட்சியளிப்பது மகிமைக்குரியது.பூலோக முதலியாரால் வேதாரணியத்திலிருந்து கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட வீரகத்தி விநாயகர் இராமரைப் பீடித்திருந்த பிரம்மஹத்தி தோஷத்தை நிவர்த்தி செய்தது போல தோஷங்களை நீக்கி அடியார்களைக் காக்கும் விநாயகக் கடவுளாக நீராவியடியில் எழுந்தருளியுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் மஹோற்சவ காலங்களில் சிறப்புற நடைபெறும் கிரியைகள், வழிபாடுகள், பிரார்த்தனைகள் யாவும் மூர்த்தியை கீர்த்தியடையச் செய்வதற்கே. அதே போன்று இவ் ஆலயத்திலும் ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் மஹோற்சவம் மூலமூர்த்தியை பெருமைப்படுத்துவதாகவே அமைகின்றது.

இத்தகைய நீராவியடிப் பிள்ளையார் இரதோற்சவத்தில் பவனி வரும் தாம்பவ தீட்சையில் அனைத்து அடியவர்களும் கலந்து கொண்டு அவனருள் பெறுவது போல வீரகத்திப் பிள்ளையாரின் மஹோற்சவங்களில் சிறப்பு மிக்க தேர்த்திருவிழாவுக்கு ஆசியுரை எழுதக் கிடைத்தமை அவனருளால் யான் பெற்ற பெரும் பேறே ஆகும்.

திருமதி யோ.பற்குணராசா,
முதல்வர், மாநகர
சபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வரப்போகும் இரு சவால்களிலிருந்து தப்பிக்குமா இலங்கை அரசு?

...கடந்த 27 ஆம் திகதி புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேசியபோதே, 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும் அதற்கு அப்பால் செல்வது குறித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இந்தியா இதுபற்றி முன்னரும் வலியுறுத்தி வந்த போதிலும், அதனை இலங்கை அரசாங்கம் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், மன்மோகன் சிங்கின் ஆட்சிக்கும் இப்போதைய ஆட்சிக்கும் இடையில் நிறையவே வேறுபாடுகள் உள்ளன.

இப்போதைய நரேந்திர மோடி அரசாங்கம் வலுவானதாகவும் கொள்கை சார்ந்த விடயங்களில் விட்டுக்கொடுப்புக்கு இடமற்றதொன்றாகவும் இருப்பது இலங்கை அரசாங்கத்துக்கு பாதகமான நிலையாகும்.

எனவே, மன்மோகன் சிங் அரசாங்கத்தை ஏமாற்றியது போல, 13 ஆவது திருத்தச் சட்ட நடைமுறைப்படுத்தும் விவகாரத்தில் நரேந்திர மோடி அரசாங்கத்தை ஏமாற்றிவிட முடியாது.


13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதே இந்திய அரசாங்கத்தினது நிலைப்பாடு என்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்கள் தெளிவாக கூறியுள்ளனர்.

அதுமட்டுமல்லாது, இந்த வாக்குறுதிகளை இலங்கை காப்பாற்றும் என்றும் இது இலங்கைக்கே நல்லது என்றும் சற்று அச்சுறுத்தும் பாணியிலும் அவர்கள் கூறுவதை அவதானிக்க முடிகிறது.

ஆனால், இலங்கை அரசாங்கமோ 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்கிறது. அதிலுள்ள சிலவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்து நாடாளுமன்றத்தில் ஆலோசிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டது என்ற உண்மையையும் அவர் அண்மையில் போட்டுடைத்துள்ளார். அதாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக என்பதைவிட, 13 ஆவது திருத்தச் சட்டத்தை வலுவிழக்கச் செய்வதற்கே இந்த தெரிவுக்குழு அமைக்கப்பட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே சுட்டிக்காட்டியது.

ஆனால், அப்போது அதனை மறுத்த அரசாங்கமே இப்போது 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து தீர்மானிக்கவே தெரிவுக்குழு அமைக்கப்பட்டதாக ஒப்புக் கொண்டுள்ளது.



இன்னொரு பக்கத்தில், வடக்கு மாகாணத்துக்கு முதல்வராக சி.வி.விக்னேஸ்வரன் இருக்கும் நிலையில், பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்து கொடுப்பதில் பிரச்சினையில்லை என்று அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

ஆனால் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழமையாக நடைமுறைப்படுத்தும் நிலை ஏற்பட்டாலும் கூட காணி, பொலிஸ் அதிகாரங்கள் ஒரு போதும் பகிர்ந்தளிக்கப்பட மாட்டாது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் பகிர்ந்தளிக்கப் படாது என்றும் இதுதொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு இந்தியப் பிரதமருக்கு கடந்த 27 ஆம் திகதி சந்திப்பிலேயே எடுத்துக் கூறப்பட்டு விட்டதாகவும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நரேந்திர மோடி அரசாங்கம் வலியுறுத்தும் நிலையில், அதனை நடைமுறைப்படுத்துவதில்லை என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

இந்த நிலையில், அடுத்த ஐந்தாண்டுகளிலும் இந்த விடயத்தில் எப்படி இரண்டு நாட்டு அரசாங்கங்களும் ஒன்றிணைந்து செயற்படப் போகின்றன என்ற கேள்வி எழுகின்றது.

இதற்கிடையே, இலங்கைப் பிரச்சினையை கையாள்வதற்கு சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிப்பது குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. இது எந்தளவுக்கு உண்மை அல்லது நடைமுறைச் சாத்தியம் என்று இன்னமும் தெளிவாகவில்லை.

ஆனால், இத்தகையதொரு சிறப்புப் பிரதிநிதியை இலங்கைக்கு இந்தியா நியமிப்பது இதற்கு முன் நிகழ்ந்திராத ஒன்று அல்ல. இந்திரா காந்தி ஆட்சியிலிருந்தபோது, இலங்கையைக் கையாள, அப்போதைய ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்தைக் கையாள்வதற்காக மூத்த இராஜதந்திரியான ஜி.பார்த்தசாரதியை சிறப்புப் பிரதிநிதியாக நியமித்திருந்தார்.

அவருக்கு சிறப்பு அதிகாரங்கள் அளிக்கப்பட்டு பிரச்சினைகளைக் கையாள்வதற்கான பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தது. அதுபோன்றதொரு தூதுவரை மீண்டும் நியமிக்கவே நரேந்திர மோடி முயற்சிப்பதாகத் தெரிகிறது.

மன்மோகன் சிங் தலைமையிலான முன்னாள் இந்திய அரசாங்கமும் இவ்வாறானதொரு சிறப்புப் பிரதிநிதியை நியமிக்கப் போவதாக சில மாதங்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகின.

அதுபற்றி அறிந்து கொண்டதும் இலங்கை அரசாங்கம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து, அத்தகைய முயற்சிகளை முடக்கிப் போட்டது.

ஆனால், தற்போதைய நரேந்திர மோடி அரசாங்கம் அத்தகைய சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிக்க முடிவு செய்தால், அதனைத் தடுக்கின்ற அளவுக்கு இலங்கையால் செல்வாக்குச் செலுத்த முடியாது.

அவ்வாறானதொரு சிறப்புப் பிரதிநிதி நியமிக்கப்பட்டால், அது இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா போடும் கடிவாளமாகவே அமையலாம். ஏனென்றால், அத்தகைய சிறப்புப் பிரதிநிதி 13 ஆவது திருத்தச்சட்டம் உள்ளிட்ட இலங்கையின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதைக் கண்காணிப்பவராகவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவுபவராகவும் இருப்பார்.

எப்போதும் தம்மைக் கண்காணித்துக் கொண்டிருக்கும் ஒருவர் இருப்பதை எந்த நாடும் விரும்பாது. எனவே, இத்தகையதொரு சிறப்புப் பிரதிநிதி நியமிக்கப்படும் சூழல் உருவானால், அது இருதரப்பு உறவுகளுக்குச் சவாலானதாகவே அமையலாம்.

அதேவேளை சிறப்புப் பிரதிநிதியை இந்தியா நியமித்தாலும், எந்தப் பாதிப்பும் தமக்கு ஏற்படாது என்று அரசாங்கம் கூறியுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவு உள்ள நிலையில், சிறப்புப் பிரதிநிதி நியமனத்தால் எந்தச் சிக்கலும் ஏற்படாது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

ஆனால், அது நடைமுறைக்கு வரும்போதுதான், அது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது தெரிய வரும். எவ்வாறாயினும் சர்வதேச விசாரணை, 13 ஆவது திருத்தம் குறித்த இந்தியாவின் அழுத்தங்கள் இந்த இரண்டு விவகாரங்களும் அடுத்து வரும் நாட்களில் இலங்கைக்கு சிக்கலைக் கொடுப்பதாகவே இருக்கும்.

இந்த இரண்டு சிக்கல்களிலிருந்தும் உடனடியாக விடுபட அரசாங்கத்தினால் முடியாது. இந்த இரண்டு சிக்கல்களையும் அல்லது சவால்களையும் எதிர்கொள்ள வேண்டுமானால், முதலில் போரில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து நம்பகமான, சுதந்திரமான உள்நாட்டு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, 13 ஆவது திருத்தச்சட்டத்தின் அத்தனை அதிகாரங்களையும் வடக்கு மாகாண சபைக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். இந்த இரண்டையும் செய்வதற்கு அரசாங்கம் தயாராக இல்லாத நிலையில், இந்தச் சவால்களிலிருந்து அரசாங்கம் தப்பிப்பதும் முடியாததாகவே இருக்கப் போகிறது.

(முற்றும்)

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு தலைவருக்கு தெளிவான அரசியல் சிந்தனை அவசியம்

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு



தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு நேரத்தை விரயமாக்கும் நடவடிக்கையாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் 13ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த விரும்புவதாக, இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் குறிப்பிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வாக்குறுதிகளை காலதாமதமின்றி அரசாங்கம் அமுல்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கில் உருவாக்கப்படும் பாராளுமன்றத் தெரிவுக் குழுக்கள் மற்றும் ஆணைக் குழுக்கள் தொடர்பில் நம்பிக்கை கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தீர்வு எதனையும் எட்டாது வெறுமனே பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் எவ்வித பயனும் கிடையாது.

மேலும் இலங்கை அரசியல் சாசனத்தில் 13ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு எவ்வித தடைகளும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அதிகாரத்தை பகிர அரசாங்கத்திற்கு விருப்பம் இல்லாவிட்டால் வேறும் மாற்று அதிகார பகிரவு யோசனைத் திட்டமொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்தாது தம்மை விமர்சனம் செய்யும் தரப்பினரை துரோகிகளாக அடையாளப் படுத்துவதில் ஜனாதிபதியும் சில அமைச்சர்களும் கூடுதல் சிரத்தை எடுத்துக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு அமர்வுகளில் பங்கேற்று நேரத்தை விரயப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி விரும்ப வில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது என்பது குறித்து அரசாங்கம் எழுத்து மூலமான யோசனைத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு எழுத்து மூலமான யோசனைத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு பதிலளிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஆளும் கட்சி அரசியல் இலாபமீட்ட முயற்சிக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தலைவருக்கு தெளிவான அரசியல் சிந்தனை இருக்க வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம், அதிகாரம் பகிர்ந்தளிப்பதனை அதிகம் விரும்புவதாகவும், காங்கிரஸ கட்சியின் ஆட்சியை விடவும் இலங்கை அரசாங்கம் மோடி அரசாங்கத்திடமிருந்து அதிக அழுத்தங்களை எதிர் நோக்க நேரிடும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (2)

# இரத்தவெறி நிகழ்வான உயிர்ப்பலியை நிறுத்துங்கள்

## சைவ அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சைவ மக்களின் மனதை ஆழமாகப் புண்படுத்துவதாக அமைந்துள்ள ஆலயங்களில் உயிர்ப்பலியிடும் செயற்பாட்டை நிறுத்துமாறு சைவ அமைப்புக்களாகிய நாம் கூட்டாக வேண்டி நிற்கின்றோம். ஆலயங்களில் பலியிடும் செயற்பாடானது எமது சமயம் போதிக்கின்ற ஜீவகாருண்யக் கொள்கைக்கும் மனித நேய நடைமுறைகளுக்கும் முற்றிலும் நேர்மாறாக அமைந்துள்ளது என இலங்கை சைவ மகாசபை தெரிவித்துள்ளது.

அச்சபை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

ஆலயங்களில் உயிர்ப்பலியிடும் செயற்பாடானது உலக ஒழுங்கில் கடைப்பிடிக்கின்ற ஜீவகாருண்ய, சுகாதாரச் சட்டங்களை பாரதூரமாக மீறுவதாகவும் விளங்குகின்றது.

அத்துடன் சமூக அமைதியின்மையை ஏற்படுத்துவதாகவும் இந்த இரத்தவெறி நிகழ்வை நேரிடையாகக் காண்கின்ற சிறுவர்கள் பிற்காலத்தில் கொரூர சிந்தனையுடைய சமூக வன்முறையாளர்களாக மாறுவதை ஊக்குவிப்பதாகவும் அமைகின்றது.

இந்த நிலையில் பல தரப்பட்ட சமய, சமூக அமைப்புக்கள், அரச திணைக்களங்கள் ஆகியவற்றின் கோரிக்கையையும் மீறி கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை பலியிடல் நிகழ்வை நடத்துவதற்கு ஆலய நிர்வாகம் முயற்சி எடுத்துள்ளதை அறிந்து நாம் மிகுந்த வேதனையடைகின்றோம்.

எனவே இந்தச் செயற்பாட்டை நிறுத்துமாறு எமது ஆன்மீக இணையத்தில் அங்கம் வகிக்கின்ற சிவத்தமிழ் குருமார் ஒன்றியம், சிவன்மானிட மேம்பாட்டு நிறுவனம், சிவத்தமிழ் மானிட விடியற் கழகம், சிவ தொண்டர் அமைப்பு, சிவமங்கையர் அமைப்பு, சைவ நெறிக்கூடம், சிவானந்த மகரிஷி யோக நிலையம் ஆகிய அமைப்புக்களுடன் இணைந்து சைவ மகா சபையினராகிய நாம் உருக்குமாக வேண்டி நிற்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ)

# அரசின் வெளியுறவுக்கொள்கை குறித்து திருப்தி அடையமுடியாது

## ரோசி சேனநாயக்க எம்.பி கூறுகின்றார்

அரசாங்கம் முக்கிய நாடுகளுடன் உரிய உறவைப் பேணத் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது. முக்கிய நாடுகளுடன அரசாங்கம் பேணி வரும் உறவு திருப்தியடையக் கூடிய வகையில் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக முக்கிய நாடுகளுடனான உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கை தொடர்பில் திருப்தி அடைய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்த வெற்றிக்கான பெருமையை ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் வழங்கியிருந்தோம் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரை அமுலாக்கம், நல்லிணக்கம் போன்ற விடயங்களில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் திருப்தியளிக்கும் வகையில் அமையவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (2)

## எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் இழந்தது காங்கிரஸ்

இந்திய லோக் சபா தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவரை நியமிக்கும் தகுதியையும் இந்திய காங்கிரஸ் கட்சி இழந்துள்ளது.

இந்தியாவின் அரசியல் சட்டத்தின் படி, இந்திய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரை நியமிப்பதற்கு, ஒரு கட்சி குறைந்த பட்சம் 55 ஆசனங்களை பெற வேண்டும்.

ஆனால் நடைபெற்று முடிந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி 44 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்தது. அதற்கு அடுத்தபடியாக ஜெயலலிதாவின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 37 ஆசனங்களை பெற்றிருந்தது.

இந்த நிலையில் 55 ஆசனங்களை எந்த ஒரு கட்சியும் பெறாத நிலையில், எதிர்வரும் ஐந்து வருடங்கள் இந்திய நாடாளுமன்றம் எதிர்க்கட்சித் தலைவர் இன்றி செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# இன்று ஒரு தகவல்

## மன நிறைவு

ஓர் ஊரிலே ராஜா இருந்தார். நாடு முழுவதும் நிறைய மரங்களை நட்டு வளர்க்க வேண்டுமென்பது அவரது விருப்பமாக இருந்தது.

தானே அதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று அவர் நினைத்தார். ஆதலால், அரண்மனையைச் சுற்றி மரங்களை நட்டார்.

இதைப் பார்த்த மக்களும் தங்கள் வீடுகளிலும் மரக்கன்றுகளை நிறைய நட்டு வளர்த்தார்கள்.

அதனால் சிறிது காலத்தினுள் அவ்வூரே பசுமையாக மாறிவிட்டது.

ஒருநாள் ராஜா தனது அரண்மனையைச் சுற்றியிருக்கும் விதம் விதமான மரங்களையெல்லாம் சென்று பார்த்தார்.

எந்தவொரு மரமும் சந்தோஷமாக இருப்பதாக அவருக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு மரத்திற்கும் ஏதாவதொரு வகையில் குறை இருந்தது கண்டறியப்பட்டது.

முதலில் அரசர் ஆல மரத்திடம் சென்றார். அது கூறியது.... “ மன்னா... நான் நன்றாகப் பெரிய மரமாகத்தான் வளர்ந்திருக்கிறேன்....நாலா புறமும் கிளைகளைப் பரப்பி நன்றாக படர்ந்து தான் இருக்கிறேன். இருந்தாலும் என்ன பிரயோசனம்? எனது பழம் மிகவும் சிறியதாக இருக்கிறது. என் கண்ணுக்கே அவை புலப்படமாட்டாது இருக்கிறதே. எனக்குப் பெரிய அவமானமாக இருக்கிறது. ஒரு நல்ல புயல் வந்தால் பேசாமல் சாய்ந்து விடலாமா என்று பார்க்கிறேன்'' என்று ஆலமரம் புலம்பியது.

அப்படியே ராஜா அடுத்தபடியாக ஓர் அத்தி மரத்திடம் சென்றார். அதுவும் புலம்ப ஆரம்பித்துவிட்டது.

“ பழம் அழகாக இருக்கிறது.... இருந்தாலும் உள்ளே விடயம் இல்லையே. அத்திப்பழத்தைப் பிரித்துப் பார்த்தால்... அத்தனையும் சொத்தை என்று ஒரு பழமொழியே உண்டாகி விட்டதே... இப்படி ஒரு கெட்ட பெயரோடுதான் இருக்கவேண்டுமா?” என்று வினவியது.

“சரி” இருக்கட்டும்... என்று கூறிவிட்டு வேப்ப மரத்திடம் சென்றார்.

“எனக்கு எவ்வளவோ மருத்துவக் குணங்கள் எல்லாம் இருப்பதாக மக்கள் பேசிக் கொள்கிறார்கள். இருந்தாலும் என்ன பயன்? என்னுடைய பழத்தை மக்கள் விரும்பிச் சாப்பிடுவதில்லையே!”என்று தெரிவித்தது.

ராஜா...அடுத்த படியாக ஒரு பனை மரத்திடம் சென்றார். “ நான் நன்றாக உயரமாகத்தான் வளர்ந்திருக்கிறேன். மற்றைய மரங்கள் எல்லாம் என்னை அண்ணார்ந்துதான் பார்க்க வேண்டும்... இருந்தாலும் என்னிடம் நிழலுக்கு யாருமே வந்து ஒதுங்குவதில்லையே!” என்று கூறி அது அலுத்துக் கொண்டது.

அடுத்தபடியாக ராஜா “ ஓக் ”மரத்திடம் சென்றார்.

ஓக் மரம் சொல்லியது, இலையுதிர் காலத்தில் “என் மீதுள்ள எல்லா இலைகளும் உதிர்ந்து போகின்றன. முடிகொட்டி மனிதர்களைப் போல மொட்டையாக நான் நிற்கவேண்டியுள்ளது.... என்ன வாழ்க்கை இது? எல்லாம் என் தலையெழுத்து?” என்று கூறியது.

ராஜா யோசித்தார்... என்ன இது? மரங்கள் பூமியின் வரங்கள் என்று சொல்கிறோம். மழை பெய்வதற்கே மரங்கள்தான் காரணம். அவைகளால் தான் பூமியே செழிப்பாகவே இருக்கிறது. வீடு கட்ட, தளபாடங்கள் செய்ய மரங்கள் உபயோகப்படுகின்றன என்று தன்னகத்தே நினைத்தார்.

அப்போது அவ்விடத்தில் நின்ற ஒரு மகிழமரம் அவர் கண்ணில் தென்பட்டது. அந்த மரம் மட்டும் நிம்மதியாக, மகிழ்ச்சியாக, மனநிறைவுடன் காட்சியளித்தது.

அது கூறியது மன்னா.. இந்த இடத்தில் நீங்கள் ஒரு முருங்கை மரத்தையோ.. வேப்ப மரத்தையோ கூட நட்டிருக்கலாம். ஆனால், இந்த இடத்தில் நடுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்தீர்களே... அதுவே எனக்கு மகிழ்ச்சி... அதுவே எனக்கு பூரண திருப்தி என்றது மகிழமரம்.

மகிழமரம் சாதாரணமாகத்தான் இருக்கும். இளம் மஞ்சள் நிறத்தில் பூக்கள்... அது காய்ந்து மணம் வீசும்.

மகிழமரம் போல மனத்திருப்தியுடன் வாழ்வதற்கு மனிதர்களாகிய நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கடுக்காய்

Botanical Name:- Terminalia Chebula
Family:- Combreraceae
Engl:- Chebulic myrobalan
Sinh- Aralu

3 ஆயிரம் அடி உயரமுள்ள மலைகளிலும் காடுகளிலும் வறண்ட நிலத்திலும் வளரும் மரம்.

இலை நீள்வட்டம், அடிநுனி குறுகியது, இலைக்காம்பு அடியில் இருசுரப்பிகள் உள்ளன.

Spikes என்றபூந்துணர் கிளை நுனியில் உண்டாகும். மலரடிச் செதிலுண்டு. மலர்கள் இருபாலானவை.

கனிகள் பளபளப்பானது. வட்ட வடிவுடையது.புறத்தே 5 விளிம்பு உள்ளது. இதனுடைய பட்டையானது.இதன் பட்டை சும்பக அமைப்பில் இனங்காணும் பொருட்டு அமைந்திருக்கும்.

யாழ்ப்பாணத்தில் மீசாலை, சரசாலை, கொக்குவில் போன்ற இடங்களில் இதன் பரம்பல் அதிகம். கடுக்காய் சிறந்த சித்தமருத்துவ பொருள். அத்துடன் இது ஒரு காய கற்ப மூலிகைப் பொருளாகும்.

கடுகலித்து எழுந்த கண்
அகழ் சிலம்பில்

மலைபடு14என்றஇந்தமலைபடு பாதத்தின் அடிக்கு கடுமரம் மிக்கு வளர்ந்த இடமகன்ற பக்க மலையில் என்ற நச்சினார் கினியர் உரை கூறுகின்றார். கடுக்காய் விளையும் மரமாக இருக்கலாம் என்று கருத இடமுண்டு.

தனியாய் உபயோகிக்கப்படும் சரக்குகளில் கடுக்காயுமொன்று.

14 வகை இரத்தினங்களில் கடுக்காயும் ஒருவகையென எண்ணப்படுகின்றது.

வைத்தியராகிய தன்வந்திரி பகவான் கடுக்காயை எப்போதும் தம்மிடம் வைத்திருந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது.

வடமொழியின் கடுக்காய்க்கு அரிதகியெனப் பெயருண்டாகக் காரணம் அது எல்லா நோய்களையும் நீக்குகிறது என்பதனாலாகும்.

சிந்தாமணியில் கடுக்காயுந்
தாயுங் கருதிலொ ன்றாலுங்



கடுக்காயங் தாயக்கதிகங்
காணி- கடுக்காயங்

நோய் ஒட்டி யுடற்றேற்று முற்ற
வன்னை யோசு

வைகளுட்டியுற்றேற்று முவந்து

கடுக்காயும் தாயும் ஒன்றென ஒருவாறு நினைத்தாலும் அந்தக் கடுக்காயே அத்தாயைப் பார்க்கிலும் சிறப்புள்ளதாம்.ஏனெனின் கடுக்காயது செரிதலுக்கு மூலமாகிய இரைப்பை, குடல் முதலியவற்றின் நோய்களை நீக்கி உணவு வகைகளை முறைப்படி செரிக்கச் செய்து நல்ல இரத்தமுண்டாக்கி உடல் வளர்ச்சி , உடல் நலம் முதலியவற்றுக்கு ஏற்ற தாகும்.

பெற்ற தாயோ அன்புடனும் ஆசையுடனும் அறுசுவை உணவுகளையும் ஊட்டி உடலை வளர்க்க முயற்சி செய்யினும் அவற்றிலுண்டாகும் நோய் அவ்வுடல் வளர்ச்சிக்கு தடையாகுமாதலால் அம்முயற்சி வீணேயாம். அதனால் தாயை பார்க்கிலும் மேலானதாக சொல்லப்படுகின்றது.

Terminalia chebula என்னும் மரத்திலிருந்து பெறப்படும் உலர்கனிய கடுக்காய எனப்படும் வறண்ட நிலங்களில் வளரும்.

பல இன கடுக்காய்களிருப்பினும் இவை ஒரே மரத்திலிருந்து பெறப்படுபவை.

சுரைக்காய் போன்று நீண்டும் பருத்தும் இருப்பது -விஜயா

உருண்டை வடிவமும் நான்கு மேடுகுளியுடையது- அரோகணி

பருத்து தடித்த தசையுடையது- அமிர்தம்

சுற்றிலும் ஐந்து கோடு போன்று குறி உள்ளது- அபயன்

தங்கசாயல் போன்ற மஞ்சள் வண்ணமுடையது-ஜீவந்தி

தன்னை சுற்றிலும் மூன்று வரி 5 வண்ணமுடையது-சீதகி/திரிவிருத்தி

கடுக்காயில் இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகிய ஐந்து வகை சுவைகளும் காணப்படினும் உவர்ப்புச் சுவை மாத்திரம் இல்லை.

கண்நோய், இரத்தப் பெருக்கும் ஆகியவற்றிற்கும் விரோதம் செய்யத்தக்கது.

கடுக்காய் கண்நோய்க்கு சஞ்சீவிக்கு ஒப்பானது.

பொதுவான எல்லா நோய்களுக்கும் சித்த மருந்துகளில் கடுக்காய்க்கு முக்கிய இடமுண்டு.

இது ஒரு காயகற்ப மூலிகை, பிஞ்சு, பற்று உலர்கனி இவையாவும் மருத்துவ குணம்மிக்கவை.

காலநிலை மாற்றத்தைக் கருத்திற்கொண்டு கடுக்காயை பாகப்படுத்தி உண்டு வர காலநிலை மாற்றங்களால் ஏற்படும் பல நோய்களிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியும்.

கடுக்காயை பொடி செய்து தினமும் இரவில் 2 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வர மலச்சிக்கல் நீங்கும்.

கடுக்காய், தூதுவளை இரண்டும் சம அளவு எடுத்து அரைத்து தினம் காலை, மாலை 2 கிராம் சாப்பிட்டுவரின் கண்பார்வையில் தெளிவு உண்டாகும்.

கடுக்காய், சுக்கு, தாமரைப்பூ, ஏலக்காய் ஒவ்வொன்றையும் 100 கிராம் எடுத்து பொடிசெய்து தினமும் 2 கிராம் சாப்பிட்டுவரின் இதய நோய், இரத்த அழுத்தம் மாறும்.

கடுக்காயை சிறு சிறு துண்டுகளாக்கி தண்ணீரில் போட்டு கொதிக்க வைக்கவும். பின்பு இதமான ஒட்டி புண்களை கழுவ அது விரைவில் ஆறும்.

கடுக்காய் பொடியை வெண்ணெயில் குழைத்து ஆசனவாயில் போட்டு வந்தால் மூலத்திலுண்டாகும் புண்கள் ஆறும்.

கடுக்காய் பொடி செய்து தினமும் இரவில் 2 கிராம் அளவு சாப்பிடின் மலச்சிக்கல் நீங்கும்.

கடுக்காய், தூதுவளை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து தினமும் காலை, மாலை இரு வேளை 2 கிராம் சாப்பிட்டு வந்தால் கண்பார்வை தெரிவு உண்டாகும்.

கடுக்காய், சுக்கு கடுக்காய், மருதம்பட்டை, ஆவாரம்பூ தலா 200 கிராம் எடுத்து அரைத்துக் கொள்ளவும். இதில் 5 கிராம் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து ஆவியாக்கிக் குடித்தால் தடைப்பட்ட மாதவிலக்கு சரியாகும்.

கடுக்காய், ஓமம், மாம்பருப்பு, கசகசா தலா 50 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும்.

இதில் இரண்டு கிராம் பொடியை எடுத்து கெட்டித் தயிரில் (60 மில்லி லீற்றர்) கலந்து சாப்பிட்பால் சீதபேதி, உஷ்ண பேதி, வயிறு உழைச்சல் அனைத்தும் தீரும்.

கடுக்காய் தூளில் (100 கிராம்) உப்பை (20 கிராம்) கலந்து அதில் 2 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வெந்நீர்குடித்து வந்தால் அஜீரணக் கோளாறுகள் உடனே குணமாகும்.

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்,**
**கைதடி.**

கடுக்காய், சிற்றரத்தை இரண்டையும் சம அளவு எடுத்துப் பொடி செய்து தினமும் காலை, மாலை இருவேளையும் இரண்டு கிராம் அளவுக்கு சாப்பிட்டுவந்தால் மூக்கடைப்பு, மூக்கில் ஏற்பட்ட புண்கள் போன்றவை குணமாகும்.

கடுக்காய், அதிமதுரம், வெள்ளரி விதை மூன்றையும் சம அளவு எடுத்துப் பொடி செய்து தினமும் சாப்பிட்டு வந்தால் இளைத்த உடம்பு பெருக்கம், சிறுநீரக நோய்களும் குணமாகும்.

# 1500 தொழில்நுட்ப பட்டதாரிகள் 2020 இல் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறுவர்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வரலாற்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போன்று கல்வித் துறை முன்னேற்றத்துக்காக வேறு எந்த தலைவர்களும் இந்தளவு பாரிய நிதியை ஒதுக்கியதில்லை என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

2020இல் புதிதாக 1500 இற்கும் மேற்பட்ட தொழில்நுட்ப பட்ட தாரிகள் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவர இத்தகைய திட்டங்கள் வழிவகுத்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி கணனி ஆய்வு கூட திறப்பு விழா நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்புரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இந்த நாடு ஆசியாவின் உன்னத நாடாகக் கட்டியெழுப்பப்படும் போது எதிர்கொள்ள நேரும் சவால்களுக்கு அரசியல்வாதிகள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் பலமாகத் திகழ வேண்டும்.

கல்வித்துறையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் பாடசாலைகள் மூடப்பட்டு வருவதாகவும் கடந்த காலங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. எனினும் அந்த நிலையை மாற்றி சுமார் 500 புதிய பாடசாலைகளை இந்த அரசாங்கம் திறந்துள்ளது.

இதுவரை காலமும் எமது கல்வித் துறையில் இல்லாத தொழில்நுட்பக் கல்வியை உயர் தரத்தில் ஒரு பாடமாகக் கொண்டு வந்துள்ளதுடன் தொழில்நுட்ப பட்டத்தைப் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக் கொள்ள வழி வகுத்துள்ளார்.

2016இல் தொழில்நுட்ப பீடத்துக்கு உள்வாங்கப்படும் ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்டவர்கள் 2020 இல் தொழில்நுட்பப் பட்டதாரிகளாக வெளிவருவர். இவர்கள் முழு உலகிற்குமான சொத்தாக உருவாக்கப்படுவர்.

நாடளாவிய 75 பிரதேச செயலாளர் பிரிவுகளில் விஞ்ஞான ஆய்வுகூடங்களுடனான பாடசாலைகளை நாம் தற்போது உருவாக்கி வருகின்றோம்.

இந்த நாட்டின் வரலாற்றில் எந்த அரசாங்கமும் இந்தளவு நிதியை கல்வித் துறை முன்னேற்றத்திற்காக செலவிட்டதில்லை. வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மட்டுமன்றி ஜனாதிபதியவர்கள் நிதி, திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடன் ஒன்றுக்கு உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளார்.

2ஆயிரத்து 500 கோடி ரூபா கடனாகப் பெற்றே எதிர்கால சந்ததிக்கான கல்வித் துறை முதலீட்டினை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2)

# 195 பேர் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற காணாமற் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையின்போது 195 பேர் சாட்சியமளித்தனர் என்று ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி மெக்ஸ்வல் பராக்கிரம பரணகம தெரிவித்துள்ளார்.

கடந்தநான்குதினங்களாகமட்டகளப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற காணாமற் போனோரை விசாரணை செய்யும்ஜனாதிபதிஆணைக்குழுவின் அமர்வு நேற்று முன்தினம் நண்பகலுடன் நிறைவடைந்தது.

கடந்த வெள்ளி, சனிக்கிழமை ஆகிய இருதினங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலகத்திலும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை ஆகிய இரு தினங்கள் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்திலும் ஆணைக்குழு தனது அமர்வுகளை நடத்தியது.

கடந்த நான்கு தினாங்களிலும் 195பேர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளனர்.

காத்தான்குடி பிரதேச செய லகத்தில், வைத்து 105பேரும், மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தல் வைத்து 90பேரும் ஆணைககுழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளனர் என்று ஆணைக்குழுவின் தலைவர் கூறியுள்ளார்.

அதேபோன்று, 211 புதிய விண்ணப்பங்களும் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளன. இதில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 181 புதிய விண்ணப்பங்களும், காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 35 புதிய விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் ஆணைக் குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பராக்கிரம பரணகம மேலும் தெரிவித்தார். (2)

# புகலிட கோரிக்கையாளர்கள் மீது ஆஸி.அரசு அழுத்தம்

(கொழும்பு)

புகலிடக் கோரிக்கையாளர்கள் மீது அவுஸ்திரேலிய அரசாங்கம் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக புகலிடக் கோரிக்கையாளர் வள நிலையத்தைச் சேர்ந்த பமிலா குர் குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டை விட்டு வெளியேறுமாறு அரசாங்கம் புகலிடக் கோரிக்கையாளர்களை பலவந்தப்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். பல்வேறு வழிகளில் இவ்வாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அச்சுறுத்துவதன் மூலம் புகலிடக் கோரிக்கையாளர்களை சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்க முயற்சிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேற முயற்சிக்கின்றமை நிரூபிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு மேன்முறையீடு செய்வதற்கான சந்தர்ப்பங்களை ஒடுக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கும் காலம் வரும்

## ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை தொடர்பிலான சர்வதேச விசாரணைக்குழு நியமித்த பின்னர் அரசாங்கம் பாரிய நெருக்கடிகளை சந்திக்க நேரிடும். யுத்தக் குற்றங்கள் தொடர்பில் அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும் என ஜே.வி.பி. தெரிவித்தது.

சர்வதேச விசாரணையினை தடுக்க வேண்டிய காலம் கடந்து விட்டது. சர்வதேச மட்டத்தில் அரசாங்கத்திற்கு பாரிய அடி காத்திருக்கின்றது எனவும் அக்கட்சி சுட்டிக்காட்டியது.

ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையின் கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் இலங்கை விவகாரங்கள் தொடர்பில் தீர்மானங்கள் எவ்வாறான தன்மையினை வெளிப்படுத்தும் என கருத்து தெரிவிக்கையிலேயே (ஜே.வி.பி) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் எவ்வாறான முடிவுகள் எடுக்கப்படும் என்பது தீர்மானங்களின் பின்னரே தெரியவரும். எனினும் எடுக்கப்படும் முடிவுகள் இலங்கைக்கு பாதகமாகவே அமையும். குறிப்பாக சர்வதேச விசாரணையொன்று இலங்கையின் யுத்த குற்றங்கள் தொடர்பிலேயே ஏற்படுத்தப்படுகின்றது. இராணுவ குற்றங்கள் தொடர்பிலான சர்வதேச தலையீடொன்று ஏற்படுத்தப்படுவது இலங்கையை பெரியளவில் பாதிக்கும். இவை தொடர்பில் அரசாங்கமே முழுப் பொறுப்பினையும் ஏற்க வேண்டும்.

சர்வதேச தலையீட்டினை தடுக்க ஆரம்பத்தில் இருந்தே அரசாங்கம் முயற்சிக்கவில்லை. பொய்யான வாக்குறுதிகள் நம்பிக்கைகளை அளித்து தற்போது அவை எதையும் நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் மக்களைத் தூண்டிவிட அரசாங்கம் முயற்சிக்கின்றது. இனியொரு போதும் சர்வதேச விசாரணையொன்று இலங்கை மீது ஏற்படாது தடுக்க முடியாது. காலம் கடந்து விட்டது. இனிமேல் அரசாங்கம் எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டாலும் வீணாகவே அமையும். அதேபோல் வடக்கில் சட்டமும் நீதியும் போதிய அளவில் செயற்படவில்லை. மக்களின் பாதுகாப்பில் அச்சுறுத்தல்கள் உள்ளதென்பதை நாம் ஆரம்பத்தில் இருந்தே குறிப்பிட்டு வருகின்றோம்.

யுத்தம் முடிவடைந்து தற்போது வடக்கில் சிவில் பாதுகாப்பினை அதிகரிக்க வேண்டும். ஆனால் இன்றும் வடக்கில் இராணுவ மயமான ஆட்சியே இடம்பெறுகின்றது.

சர்வதேச நாடுகளிடம் வாக்குறுதிகளை வழங்கியமையில் தவறில்லை. எனினும் அவற்றினை செயற்படுத்தியிருக்க வேண்டும். வடக்கின் நிலைமைகளை சர்வதேசம் அவதானித்துக் கொண்டிருக்கின்றது. வட மாகாணத்தில் எது நடந்தாலும் சர்வதேச அரங்கில் அது பெரிய விடயமாக்கப்படுகின்றது. எனவே இவ்வாறான சூழ்நிலையில் அரசாங்கம் ஜனநாயகத்தை கையாளாது இராணுவ ஆட்சியின் பாதையில் செல்வது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். தமிழர்கள் மட்டும் இதனால் பாதிக்கப்படவில்லை. சிங்கள முஸ்லிம் மக்களையும் இது கடுமையாக பாதிக்கின்றது. இவ்வாறான சூழலை உருவாக்கியமைக்கான முழுப் பொறுப்பும் இந்த அரசாங்கத்திடமே உள்ளது.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு பாரிய அடி காத்திருக்கின்றது. இறுதி யுத்தம் தொடர்பில் சாட்சியங்களை அளித்த புலம் பெயர் தமிழர்கள் மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலான பலர் உள்ளனர். இவை உண்மையா? பொய்யா? என்பது இனிமேல் சர்வதேச மட்டத்திலேயே விசாரிக்கப்படும். எனவே அதற்கு முகம் கொடுக்க அரசாங்கம் இனிமேல் தயாராக வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (2)



வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியை வியட்நாம் தூதுவர் டோன் சின் தாங் நேற்று ஆளுநர் பணிமனையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போது வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பாக வியட்நாம் தூதுவர் ஆளுநரிடம் கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம். (படம் :-என்.குமார்)

## ஐ.நா.விசாரணை குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பது குறித்து வாக்கெடுப்பு ?

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் நியமிக்கப்படும் விசாரணைக் குழுவினை நாட்டுக்குள் அனுமதிப்பது குறித்து நாடாளுமன்றத்தினால் தீர்மானிக்க முடியும் என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவினை நாட்டுக்குள் அனுமதிப்பதா இல்லையா என்பதனை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

நாடாளுமன்றில் பெரும்பான்மை பலத்துடன் தீர்மானிக்கப்பட்டால் குறித்த விசாரணைக் குழுவினால் நாட்டுக்குள் பிரவேசிக்க முடியாது.

விசாரணைக் குழுவின் இலங்கை விஜயம் தொடர்பில் நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

நாடாளுமன்றின் தீர்மானத்திற்கு அமைய விசாரணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு விசா வழங்குவதா இல்லையா என்பதனை நிர்ணயிக்க முடியும்.

எவ்வாறெனினும், ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவின் இலங்கை விஜயம் குறித்து நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்த அரசாங்கம் இன்னமும் தீர்மானிக்கவில்லை.

அவ்வாறு தீர்மானித்தால் அந்த தீர்மானத்திற்கு எவராலும் சவால் விடுக்க முடியாது.

நாடாளுமன்றத் தீர்மானத்திற்கு அமைய விசா வழங்க முடியாது என தெரிவிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் இருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார் . (2)

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும்

### மத்திய அமைச்சர் தெரிவிப்பு

மீனவர் பிரச்சினையில் நிரந்தர தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறியுள் ளார்.

டில்லியில் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் இது தொடர்பாக கூறுகையில்,

தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்ட தகவல் கிடைத்ததும் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை தொடர்பு கொண்டு மீட்பதற்கான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ளும்படி வலியுறுத்தினேன்.

வெளியுறவுத்துறை அமைச்சகம் இலங்கை அரசுடன் பேசி வருவதாக சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

அவரை நேற்றைய தினம் நேரில் சந்தித்து கதைத்துள்ளேன்.

தொடரும் இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க விரைவில் நிரந்தர தீர்வுகாண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என அவர் கூறினார். (2)

## பிரிவுத்துயர் பகிர்வு



### செல்லத்துரை சிவானந்தம்

வவுனியா நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவானந்தம் கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்று பின்னர் பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு நெடுங்கேணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சுப்பிரமணியம் தர்மராஜா



யாழ்.சரவணையைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தர்மராஜா கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### தீயோ பிரான்சிஸ்

யாழ். பழைய பூங்கா வீதி கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் செபமாலை மாதா கோயிலடி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தீயோ பிரான்சிஸ் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று முற்பகல் 11 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### குணரட்ணம் ரூபகுமார்



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் ரூபகுமார் கடந்த 6 ஆம்திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு Ravidassia Community Centre, 26 Carlyle Road, Manor Park, London, London E12 6BN,UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி நரசிங்கம் தெய்வானைப்பிள்ளை

வட்டு. வடக்கு,சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் கிழக்கு, அந்தோனியார் கோயிலடியைப் வசிப்பிடமாகவும் கொண்ட நரசிங்கம் தெய்வானைப்பிள்ளை கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று தொல்புரம் கிழக்கு அந்தோனியார் கோயிலடியிலுள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிச் செய்தி

ய். கோண்டாவில் உருவானாய்.
னிய பிரசித்தி ஷேத்திரத்தில் கோபுர
ளி வழங்கிக் கொண்டிருக்கின்ற
ஆன்மாக்களுடைய ஆணவத்தை
ளுக்கும் அருள் பாலிக்கின்ற நல்ல
! வீரீர்!



*மஸ்ரீ நாகேந்திர திவாகரக் குருக்கள், தில்லையம்பதி.*

கிருத் தியம்
காத் தல்,
ன்ற வகை
பங் ள
விளங்குகின்
ஆன்மாக்
, கன்மம்,
த்து திருவ

ம்பதி வாழ்
தறைவற்ற
ருணத்தில்
றி துதித்து

### தலைவரின் ஆசிச் செய்தி

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி அகிலத்தை காத்திடும் தில்லையம்பதி தேவி சிவகாம சுந்தரி இரதத்தில் ஆரோகணித்து வலம் வந்து சகல மக்களும் நாட்டில் சாந்தி சமாதானம் கிடைத்து நல் வாழ்வு அளிப்பாயாக பிரார்த்திக்கின்றோம்.

*த.இரத்தினகுணசிங்கம்*
*தலைவர்,*
*மத்திய கிராம முன்னேற்ற சங்கம்,*
*மத்திய சனசமூக நிலையம்*

நவகோண வடிவிலான சித்திரத்தேர் அமையப் பெற்று வருவதை அன்னையின் அடியவர்கள் யாவரும் அறிவீர்கள்.

2016 ஆம் ஆண்டு திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடி உள்ள இவ்வேளையில் அம்பாளுக்கு 27' அடி உயரம் 13 1/2' விட்டமும் கொண்ட நவகோண வடிவிலான சித்திரத்தேர் வேலைகள் மிக மும்முரமாக நடைபெற்று வருவதை தாங்கள் அறிவீர்கள். இவ்வேலைகள் யாவும் செவ்வனே நிறைவேற அடியார்களின் அருள் காணிக்கையிலேயே தங்கியுள்ளது.

சிறு துளி பெருவெள்ளம் என நாம் அனைவரும் வழங்கும் பங்களிப்பிலேயே கும்பாபிஷேகமும் தேர்த் திருப்பணி வேலைகளும் நிறைவுபெறும் என்பதில் ஐயமில்லை. 2013 ஆம் ஆண்டு மகோற்சவ தேர்த்திருவிழா தினத்தன்று அம்பாளுக்கு நவகோண வடிவிலான சித்திரத் தேர் அமைப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

2014 ஆம் ஆண்டு பங்குனி உத்தர நன்நாளில் அம்பாளுக்கு புதிய நவகோண சித்திரத் தேர் அமைப்பதற்கான ஆரம்பப் பணிகள் நடைபெற்றது.

*ஆக்கம்: அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர்*
*பாடியவர்:கலைமாமணி ,ரி.எம்.சௌந்தரராஜன்*

இராகம்-காமாஸ்
தாளம்-ஆதி

*ஊர் கூடி வடம்பிடித்தே உளம் உருகச்-சித்திரத்*
*தேர் ஏறி வலம் வந்தாள் தேவி சிவகாமி*
(ஊர் கூடி)

**அனுபல்லவி**

வாரகி வைஷ்ணவி வளம் திகழ் கோண்டாவில்
சீர்மேவு தில்லைப்பதி சிவகாமசுந்தரி
(ஊர் கூடி)

**சரணம்**

தேரின் திருத்தொங்கல் வாகுமாலை சூட
நாதஸ்வர கானம் நாதத் தவில் ஒலிக்க
பேரின்ப பக்தர் வழிபெருகிக் கண்ணீர் சொரிய
ஊரின் புறக் கோண்டாவில் உல்லாசி பவனி வந்தாள்
(ஊர் கூடி)

புன்னகை புரிந்தாருள் பொலிவுறத் தந்தனன்
அன்னவள் வரதமும் அபயமும் காட்டினாள்
என்னகுறை எமக்கு எங்கள் தாய் இருக்கும் போது
இன்னமுத்தத் தாயன்பால் என்றும் எமைக் காத்திடுவாள்
(ஊர் கூடி)

ழ்த்துச் செய்தி
ஸ்ரீ சிவகாமி அம்மாள் இன்று
கோலக்காட்சியை காணக்
ல் சாந்தியும் சமாதானமும்
போமாக.
*ர் தருவாள்.*
*தேர்த்திருப்பணிச் சபை,*
*ம்பதி.*

## தேர்த்திருவிழா உபயகாரர்கள்

**செல்வா எலக்ரிக்கல்ஸ்**
மின்சாரப் பொருட்கள், எஸ்லோன் பைப் வகைகள்
மொத்த சில்லறை விற்பனையாளர்கள்.
பலாலி வீதி,
திருநெல்வேலி.

**விஜய் சில்க்**
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**முத்தொளி வீடியோ**
தில்லையம்பதி,
கோண்டாவில்.

**பாலா வீடியோ**
தில்லையம்பதி,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச் சாட்சியைக் கொல்லக் கூடாது. அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்!
- சாமுவேல் காஸ்ரிட்ஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எரிக் சொல்ஹெய்ம் முக்கியமான சாட்சி

நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் இரண்டு. ஒன்று மனச்சாட்சி ஒன்று தெய்வத்தின் சாட்சியம்மா என்ற சினிமாப் பாடல் நிறைந்த அர்த்தமுடையது.

ஒவ்வொரு மனிதனுக்கும் மனச்சாட்சி முக்கியமானது. மனச்சாட்சியை மீறி எவரொருவர் தனது கடமையை செய்கிறாரோ அவரால் இந்த உலகம் எந்த நன்மையையும் பெற்றுக்கொள்ள முடியாது. இதன் காரணமாகவே மனச்சாட்சிக்கு ஒவ்வொருவரும் கட்டுப்பட வேண்டும்.

மனச்சாட்சியை மீறி எவர் செயற்பட்டாலும் என்றோ ஒருநாள் அவர் தன் மனச்சாட்சியாலேயே தண்டிக்கப்படுவார் என்பது நிறுத்திட்டமான உண்மை.

ஆகையால்தான், தன் நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும் என்றார் வள்ளுவர்.

மனச்சாட்சி என்பதற்கு அப்பால், தெய்வத்தின் சாட்சி என்பதும் முதன்மை பெறுகிறது.

ஒரு சம்பவத்தை எவரும் காணவில்லை என்றாலும் இந்த உலகம் முழுவதும் நிறைந்திருக்கக் கூடிய பரம்பொருள் எல்லாவற்றையும் பார்த்திருப்பார் என்ற நம்பிக்கையே தெய்வத்தின் சாட்சியாகும். இந்த இரண்டு சாட்சியும் ஒரு மனிதன் நல்லவனாக வாழ்வதற்கு அவசியமானதாகும்.

அதன் காரணமாகவே நல்லவர்கள் மனச்சாட்சியையும், தெய்வத்தின் சாட்சியையும் முதலில் நினைத்துக் கொள்வர். எனினும் எங்கள் நாட்டில் மனச்சாட்சியும் தெய்வத்தின் சாட்சியும் உறங்கு நிலையில் இருக்கின்றது என்பதைக் கூறித்தான் ஆக வேண்டும்.

மனச்சாட்சி வேலை செய்யுமாக இருந்தால், இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கான உரிமை 2009 ஆம் ஆண்டு மே மாதத்திலேயே வழங்கப்பட்டிருக்க வேண்டும். விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்காக நடத்தப்பட்ட போரில் அப்பாவித் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட கொடூரம் மனச்சாட்சியுள்ள எந்த மனிதரையும் நிச்சயம் வதைத்திருக்க வேண்டும்.

எனவே தமிழ் மக்களின் உரிமையை இனி மேலும் அடக்கி வைப்பது தர்மம் ஆகாது என்ற நிலையில், இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை என்பது மட்டுமல்ல; மேலும் மேலும் தமிழ் மக்கள் மீது அநீதி இழைக்கப்படுகின்றதே! அதுதான் கொடுமையிலும் கொடுமை. எதுவாயினும் மனச்சாட்சி வேலை செய்ய மறுக்கின்றபோது தெய்வத்தின் சாட்சி வேலை செய்யும். வேலை செய்ய வேண்டும்.

இதன் அடிப்படையாகவே சர்வதேச விசாரணை என்பது கருக்கட்டுகிறது. ஐ.நா. சபையால் முன்னெடுக்கப்படும் சர்வதேச விசாரணையில்,

நோர்வேயின் விசேட தூதுவராக இருந்து, இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற ஏற்பாட்டாளராக இருந்த எரிக் சொல்ஹெய்ம் சாட்சியமளிப்பார் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

இங்குதான் தெய்வத்தின் சாட்சிபற்றி நாம் எண்ணத் தோன்றும். ஆம், சர்வதேச விசாரணையில் எரிக் சொல்ஹெய்மின் சாட்சியம் மிகவும் முக்கியமானது.

தமிழ் மக்களின் அவலங்களைப் புரிந்து கொண்ட ஒரு வெளிநாட்டவராக எரிக் சொல்ஹெய்ம் சாட்சியமளிப்பது தெய்வத்தின் சாட்சிக்கு ஒப்பானது.

# வல்வை நகரசபையின் பணிகள் முடங்கும் நிலையில்!

## உறுப்பினர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபையில் கொடுப்பனவுகளிற்கான அங்கீகாரம் நிறுத்தப்பட்டுள்ளதனால் சபை முடங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையில் இடம்பெறுகின்ற ஊழல்கள் தலைவரின் எதேச்சதிகாரப் போக்கு என்பவற்று முடிவு கட்டாவிட்டால் எவ்வித கொடுப்பனவுகளிற்கும் தாம் அங்கீகாரம் அளிக்கமாட்டோம் என நகர சபை உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டத்தினர் இம் மாத இறுதிக்குள் நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் அல்லாவிட்டால் மக்களினை திரட்டி போராடுவோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

வல்வெட்டித்துறை நகரசபை பிரதித் தலைவர் கந்தசுவாமி சதீஸ், சபையின் ஆளுங் கட்சி உறுப்பினர்களான கோனலிங்கம் கருணானந்தராஜா, கனகராஜா ஜெயராஜா, சபையின் எதிர்க்கட்சி உறுப்பினரான திருமதி இந்திரன் சைலாஜினி ஆகியோர் இணைந்து நேற்று மதியம் வல்வெட்டித்துறை நகர சபையில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றினை நடத்தியிருந்த னர்.

இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் சர்வாதிகாரத்துடனும் சக உறுப்பினர்கள் மீது சேறு பூசும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைக்கு முரணாக செயற்பட்டு வருவதோடு கட்சி மீது அவதூறும் பரப்பி வருகின்றார்.

இவ் இழுபறிநிலை பலவருட காலமாக நடைபெற்று வருகின்ற போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை எவ்வித நடவடிக்கையும் நகர சபை தலைவர் மீது மேற்கொள்ளவில்லை. ஆகையினால் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியே ஊழியர் சம்பளக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகளுக்கு அங்கீகாரம் அளிக்கவில்லை என தெரிவித்தனர். இது தொடர்பில் வல்வெட்டித்துறைநகர சபை தலைவரிடம் கேட்டபோது;

இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையே விட்டபிழை. இப் பிரச்சினை தொடர்பில் அவர்கள் ஆரம்பத்தில் கவனம் செலுத்தியிருந்தால் இந்தளவுக்கு இப் பிரச்சினை வந்திருக்காது.

நான் ஊழல் இல்லாமல்தான் பணி செய்கிறேன் என தன்மீது சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களினை மறுத்ததோடு ஊழல் செய்திருந்தால் சட்டப்படி நிரூபித்துக் காட்டட்டும் எனவும் சவால் விடுத்திருந்தார். (எ-4)

# ஓடியது சக்கரங்கள் தப்பினர் பயணிகள்

(வவுனியா)

வவுனியா நோக்கி பயணஞ்செய்து கொண்டிருந்த அரைச் சொகுசு பஸ் ஒன்றில் பின் சக்கரங்கள் நான்கும் ஒரே நேரத்தில் கழன்று விழுந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த அரைச் சொகுசு பஸ் ஒன்றின் பின் சக்கரங்கள் நான்கும் ஒரே நேரத்தில் கழன்று விழுந்துள்ளன.

புத்தளம் - அனுராதபுரம் வீதியின் இருபதாம் கட்டைப் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது அதிகமான பயணிகள் குறித்த பஸ்ஸில் பயணித்துள்ளனர். இதன்போது இரு பயணிகள் காயமடைந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-250)

## அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு செயலமர்வு

(கொழும்பு)

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 16,17,18 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை யாழ்ப்பாண பிராந்திய பயிற்சி நிலையத்தில் (சுகாதார கிராமம் பண்ணை) நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச் செயலமர்வின் பாடங்கள் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டத்தையும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

எனவே மேலதில விபரங்களுக்கு 0773648193 இலக்க தொலைபேசியினூடாக தொடர்பு கொள்ளுமாறு வட பிராந்திய தலைவர் கணேசன் கம்ஸநாதன் கேட்டுள்ளார். (அ)

# விசாக பொங்கல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை- சித்தியம்பதி புளியடி அருள்மிகு ஸ்ரீ அண்ணமார் தேவஸ்தான விசாகப் பொங்கல் விழா எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு விசேட அபிசேகம் மற்றும் வழுந்துப் பானை வைக்கும் நிகழ்வுடன் நடைபெறும். (2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு வசந்த மண்டப பூசையும் தொடர்ந்து தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (2)

# அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மகிந்தோதய தொழில்நுட்ப பீடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மேற்படிக் கல்லூரி வளாகத்தில் அதிபர் எஸ்.சிவநேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவனாந்தா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (2)

## நீராவியடி ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய பத்தாம் திருவிழா இன்று

### நீராவிக் குளக்கரையான் திருநாள் பத்து திருத்தேரோட்டம்



இந்திர விமானந்தனில்
உவகையுடன் மேலேறி
பஞ்சநடை பேதங்களை
நர்த்தனத்தில் காட்டி
அகம்கார மமகார மாயவலை
கிழித்தெறி(ந்) தே
ஞர்கின்றான் நான் மாட
வீதிகளில்! இன்று

*கஜவதனகுஹராஜனார்*

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நல்லதைச் சிந்திப்பீர்



✦ தாய், தந்தை மீது அன்பில்லாதவனுக்கு தெய்வ பக்தி ஒருநாளும் உண்டாகாது.

✦ கண்களே உள்ளத்தின் வாசல். அதன் மூலம் உள்ளத்தில் இருப்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

✦ சாதகப்பறவை மழை நீரை மட்டும் அருந்துவது போல, நல்லவர்கள் நல்லதை மட்டும் எப்போதும் சிந்திப்பார்கள்.

✦ உலகியல் வாழ்வில் ஈடுபடுபவர்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் துன்பம் இருந்து கொண்டே இருக்கும்.

✦ அவித்த நெல் முளைப்பதில்லை. பக்குவம் பெற்றவனுக்கு மறுபிறவி உண்டாவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத கடலட்டை பிடிப்பு; உள்ளூர் கடற்றொழிலாளர் பாதிப்பு

## வைத்திய கலாநிதி சிவமோகன் சுட்டிக்காட்டு

மாத்தளன் முதல் சாலை வரையான கடற்கரை வரையுள்ள பகுதிகளில் இராணுவத்தின் ஆதரவுடன் அரசசார்பு முதலாளிகள் கடலட்டை பிடிக்கும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி பிரதேசத்திற்கு தமிழ் மக்கள் செல்ல முடியாதவாறு இராணுவத் தடை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இரவு நேரங்களில் ஒளியூட்டி ஒட்சிசன் சிலிண்டர்களின் உதவியுடன் இத்தொழிலில் ஈடுபட்டு வருவதாக வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதனால் தமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் இரவில் ஒளியூட்டி கடலட்டை தொழிலில் ஈடுபடுபவர்களால் மீன்கள் ஆழ்கடலை தாண்டி கரையோரப் பகுதிக்கு வருவதில்லை எனவும் இதனால் தமது நாளாந்த மன்பிடி தொழில்பத்து மடங்கு குறை வடைந்து 30 கிலோவில் இருந்து 3 கிலோ வரை குறைந்து விட்டதாக மாவட்ட கரையோர மீனவ மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

கடலட்டை அள்ளுபவர்களிடம் அனுமதிப்பத்திரம் உள்ளதா? நாம் அறியோம். அப்படி அனுமதிப்பத்திரம் வழங்குவதாயினும் எமது வன்னிப் பிரதேச மனவர்களுக்கல்லவா அந்த உரிமையுள்ளது.

நிரந்தர அரசியல் தீர்வு மூலம் சுயாதீன பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் எமக்குக் கிடைக்கும் வரை இது தொடரும் என எதிர்பார்க்கலாம்.

எமது தமிழ் மக்களை அடக்கியாள இராணுவம் மட்டும் போதாது என்று பொலிஸ் அதிகாரமும் வேண்டும் என கருதும் இந்த அரசுடன் எப்படி நியாயபூர்வமான உரிமைகளை எதிர்பார்க்க முடியும்.

எனவே ஒன்றிணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாநிலத்திற்கு பூரண சுயாதீன பொலிஸ், காணி அதிகாரம் கோரி தமிழ் மக்கள் போராட வேண்டிய காலம் நெருங்கி வருகிறது எனத் தெரிவித்தார். (9-6)

## நிறை குறைந்தால் சட்ட நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாண் விற்பனை நிலையங்கள் மற்றும் வெதுப்பகங்கள் போன்றவற்றில் நிகர நிறைக்கு குறைவாக பாண் விற்பனை செய்யப்படும் பட்சத்தில் வெதுப்பக உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென கிளி/மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

கிளி/மாவட்டத்திலுள்ள பாண் விற்பனை நிலையங்களிலும் வெதுப்பகங்களிலும் பாணின் நிகர நிறையான 450 கிராமுக்கு குறைவாக விற்பனை செய்யப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறாக நிறைகுறைவான பாண் விற்பனை தொடருமானால் வெதுப்பக உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (9)

## சலுகை விலையில் விற்பனை

(முல்லைத்தீவு)

நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்ட மணல், மரங்கள் என்பன சலுகை விலையில் சமய வழிபாட்டுத் தலங்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக முல்லை.மாவட்ட நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இச் செயற்பாடு நீதியமைச்சின் அனுமதியுடன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, ஆலயங்களுக்கு தேவையான மரம், மணல் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு முல்லை. மாவட்ட நீதிமன்ற பதிவாளருடன் ஆலய நிர்வாகிகள் நேரடியாக தொடர்பு கொள்ள முடியும். (9-267)

## டிப்பர் விபத்தில் மூவர் படுகாயம்

(மல்லாவி)

கிளிநொச்சி பழைய முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை 9.45 மணியளவில் ஏ-9 வீதி பழைய முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கிளிநொச்சியிலிருந்து மாங்குளம் நோக்கி குளிர்பானங்களை ஏற்றிக் கொண்டு வந்த டிப்பர் வாகனமும் மற்றொரு டிப்பர் வாகனமும் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்ட போதே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் த.ரெத்தினேஸ்வரன் (வயது 32), சி.சஜீபன் (வயது 28), நா.கேசவுன் (வயது25) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக சிகிச்சைக்காக ஒருவர் வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9-15)

## நிர்வாகசபை தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, ஜெயந்தி நகரில் அமைந்துள்ள மகாதேவ ஆச்சிரமத்தில் கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

இதற்கமைய புதிய நிர்வாக சபைத் தலைவராக ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகளும் உபதலைவராக ஆ.சிவநாதன், செயலாளராக கு.நித்தியானந்தன், உபசெயலாளராக குவேணுகோபன், பொருளாளராக சு.சுகநீதன் மற்றும் கணக்காய்வாளராக திலக ரட்ணம் அன்கோ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் நிர்வாக உறுப்பினர்களாக அ.நாகேந்திரம், செ. செல்வரெட்ணம், சி.சிவமோகன், வி.கிருபாகரன்;அ.விஜயகுமார்,க.பிரதீஸ்வரன், மு.கனகரத்தினம், த .பேரம்பலம், ச.ஸ்ரீமுருகன், ச.திரவியச் செல்வம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (9)

## அரும்பு சஞ்சிகை வெளியீடு

(பூநகரி)

கிளி/பூநகரி ஞானிமடம் அரச தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் அரும்பு சஞ்சிகை வெளியீடும் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி த.கனகசபை தலைமையில் இடம் பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளி/வலயக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேல் கலந்து கொள்ளவுள்ளார். (9-84)






பல கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் முல்லை.மாவட்ட செயலகத்தின் தோற்றத்தினை படத்தில் காணலாம்.(படம்:-முல்லைத்தீவு செய்தியாளர்)

## பூநகரியில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டு

(பூநகரி)

பூநகரி ஆலங்கேணி கிராமத்திலுள்ள வீடொன்றில் இரண்டு இலட்சம் ரூபா பணமும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை நள்ளிரவு வேளை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வீட்டார் உறக்கத்திலிருந்த வேளை யன்னல் கம்பிகளை உடைத்து கொண்டு வீட்டினுள் நுழைந்த திருடர்கள் 2 இலட்சம் ரூபா பணத்தையும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

வீட்டின் உரிமையாளர்களினால் பூநகரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அங்கு மோப்ப நாய்கள் சகிதம் வந்த பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். எனினும் இதுவரை எவரும் கைதாகவில்லை. தொடர்ந்தும் பொலிஸார் தேடுதல்களையும் விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (9-84)

# அடிப்படை வசதிகளின்றி மந்துவில் பொதுச்சந்தை

(முல்லைத்தீவு)

பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வரும் மந்துவில் பொதுச் சந்தையை உரிய முறையில் புனரமைக்குமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சந்தை முல்லை.- புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் சிவநகர் 6 ஆம் வட்டாரங்களில் இயங்கி வருகின்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான மேற்படி சந்தையானது, மீள்குடியேற்றத்தின் பின்னர் கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஓரளவு திருத்தங்களோடு மீளவும் இயங்கத்தொடங்கியது.

எனினும், தற்காலிகத் திருத்தங்களோடு சந்தைக் கட்டடம் இயங்க ஆரம்பித்தமையால் பல்வேறு நெருக்கடிகளை மக்களும் வியாபாரிகளும் எதிர்நோக்கி வருகின்றனர்.



இதன்படி சந்தையின் கூரை அமைப்பு சீரின்மையால் மழை காலங்களில் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது.

அத்தோடு சந்தையினுள் வெற்றிலைக்கடை, இறைச்சிக்கடை, வாகனத்தரிப்பிடம் என்பன அமைக் கப்படவில்லை.

சந்தை வளாகத்தினுள் ஆண், பெண் என தனித்தனியாக மலசல கூட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள போதும் நீர் வசதியின்மையால் பயன்படுத்த முடியாத நிலையில் மூடப்பட்டுள்ளன.

சந்தை வளாகத்தினுள் கழிவகற்றல் செயற்பாடுகளின்மையால் குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றன. எனவே, இச்சந்தையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு சம்பந்தப்பட்டோரிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-267)

## முல்லை.மீனவர்கள் உயிர்க்காப்பு அங்கிகள் அணியாது தொழிலில் ஈடுபட முடியாது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் உயிர்க்காப்பு அங்கிகள் இல்லாமல் கடலுக்குச் சென்றால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிகைக எடுக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2013ஆம் ஆண்டு தென்பகுதிக் கடற்பரப்பில் திடீரென்று ஏற்பட்ட இடி, மின்னல் மழையுடன் வீசிய சுழல் காற்றினால் ஆழ்கடலில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பல மீனவர்கள் உயிரிழந்திருந்தனர்.

இந்த அனர்த்தத்தை அடுத்து, மீனவர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு சகல மாவட்டங்களிலுமுள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களங்களிடம் உயிர்க்காப்பு அங்கிகளை கடற்றொழில் அமைச்சு வழங்கியதுடன், தொழிலுக்குச் செல்லும் போது தவறாது அணியுமாறும் அறிவுறுத்தியுள்ளது.

இந் நிலையில். முல்லைத்தீவு மாவட்ட் கடற்றொழில் நீரியல் வளத்துறைக்கு 2013ஆம் ஆண்டு 80 உயிர்க்காப்பு அங்கிகளும் 2014ஆம் ஆண்டு 150 உயிர்க்காப்பு அங்கிகளும் அனுப்பிவைக்கப்பட்டன.

இவற்றில் 52 அங் கிகள் மீன்வர்களினால் எடுக்கப்படாமல் கிடப்பில் கிடக்கின்றன.

அத்தோடு அண்மையில் மேலும் 694 உயிர்க்காப்பு அங்கிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே. உயிர்க்காப்பு அங்கிகளை பெற்றுக்கொள்ளாத மீனவர்கள் தங்களது அங்கிகளை திணைக் களத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் கூறினார். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் நியூசிலாந்து 508 ஓட்டங்கள் குவிப்பு



மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 508 ஓட்டங்கள் குவித்தது.

மக்கலம் தலைமையிலான நியூசிலாந்து கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் மற்றும் 2 இருபது-20 போட்டிகளில் விளையாடுகிறது.

இச்சுற்றுத் தொடரின் முதல் டெஸ்ட் போட்டியின் முதல்நாள் (08) ஆட்டத்தின் முடிவில் நியூசிலாந்து அணி 2 விக்கெட் இழப்புக்கு 240 ஓட்டங்கள் எடுத்தது.

வில்லியம்சன் சிறப்பாக விளையாடி சதம் விளாசினார். அவர் 105 ஓட்டங்களுடனும், ரெய்லர் 34 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

இதன் தொடக்கமாக நேற்று முன்தினம் 2-வது நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து ஆடிய வில்லியம்சன் 113 ஓட்டங்களும் ரெய்லர் 55 ஓட்டங்களும் எடுத்து ஆட்டம் இழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய ஜிம்மி நீஸம் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். அவர் 11 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 107 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன்மூலம் நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங் சுக்காக 7 விக்கெட் இழப்புக்கு 508 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதைத் தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸ்சை ஆரம்பித்த மேற்கிந்திய தீவுகள் அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 9 ஓவர்களை எதிர்கொண்டு 19 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய (இன்றைய) 3-ம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி இச்செய்தி அச்சுக்கு போகும்வரை 5 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்கள் எடுத்து துடுப்பெடுத்தாடி வருகிறது. (க)





# ஆட்டத்தில் மட்டுமே கவனம் தன்யா



எனக்கு செஸ் ஆட்டத்தில் மட்டுமே கவனம் இருப்பதால், என்னை கவர்ச்சியான வீராங்கனை என்று சிலர் சொல்வதை பற்றி கண்டு கொள்வதில்லை என தன்யா கூறியுள்ளார்.

டெல்லியைச் சேர்ந்த செஸ் வீராங்கனை தன்யா சச்தேவ், இந்தியாவுக்காக விளையாடி வருகிறார். இவர் பெண்களுக்கான பிரிவில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்று அசத்தியவர்.

திறமைமிக்க வீராங்கனையான இவர் கவர்ச்சிகரமான வீராங்கனை பட்டியலிலும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது குறித்து தன்யா சச்தேவ் கூறுகையில், எனக்கு எனது ஆட்டத்தில் மட்டுமே கவனம் உள்ளது. அதனால் என்னை சிலர் கவர்ச்சிகரமான வீராங்கனை என்று சொலவது பற்றி பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை.

இந்தியாவில் மட்டும்தான் செஸ் ஒரு கவர்ச்சிகரமான விளையாட்டு இல்லை என்ற எண்ணம் உள்ளது.

ஆனால் ஐரோப்பிய நாடுகளில் அழகான ஆடை அணிந்து வருகின்றனர்.

மேலும் ஐரோப்பிய பகுதிகளுக்கு செல்லும் போது, அங்குள்ள கலாசாரம், சமையல் பற்றி தெரிந்து கொள்வேன்.

செஸ் விளையாட்டில் ஈடுபடாமல் இருந்திருந்தால், பயணக் கட்டுரையாளராக மாறியிருப்பேன் என்று கூறியுள்ளார். (க)

## யுத்த வடு...

அதிகாரமளிக்கப்பட்டு, முழுமையான விசாரணைகளை நடத்துவதற்கு எமது அலுவலகம் நிபுணர் குழுவை நியமித்துள்ளது.

இந்த குழுவினருக்கு பல நிபுணர்களுக்கும் அதிகாரமளிக்கப்பட்டவர்களும் உதவி வழங்குவதற்கு தயாராக உள்ளனர்.

நம்பகமான உண்மையினை கண்டறியும் செய்முறையுடன் ஒத்துழைக்க இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு நான் அரசாங்கத்திடம் கேட்கிறேன் என பிள்ளை மேலும் கூறினார்.

சில நாடுகளின் மனித உரிமை பிரச்சினைகளை சுட்டிக்காட்டியதால தான் முகங்கொடுத்த விமர்சனங்களை பற்றி தனது உரையில் குறிப்பிட்ட நவி பிள்ளை, பூகோள விழுமியங்களின் கொள்கை ரீதியான அமைப்பை பாதுகாப்பதால் ஒவ்வொரு நாட்டுக்கும் முக்கிய நன்மை உண்டாகுமென கூறினார்.

மனித உரிமை மீறல்கள், நாடுகளின் குழப்ப நிலைக்கும் மோதல்களுக்கும் பிரதான காரணிகளில் ஒன்றாக உள்ளது. எனவே ஒவ்வொரு நாடுகளும் மனித உரிமையினை பாதுகாப்பதில் உள்ள குறைபாடுகளை கண்டறிந்தால் அதற்கு நன்மை உண்டாகும் என அவர் கூறினார்.

இருப்பினும் எனது அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட அறிக்கைகள் மற்றும் ஆய்வுகள் இழுத்தடிப்புகளாலும் மறுப்புக்களாலும் எதிர்கொள்ளப்பட்டன.

இது நாம் அரசாங் கங்களை விமர்சித்ததால் உண்டானதா? என அவர் கேள்வியெழுப்பினார்.

ஆம், இதுவே மனித உரிமைகளை பரப்புரை செய்வதன் இயல்பு. அதிகார வர்கத்தினரிடம் உண்மையை கூறுவது சிலருக்குள்ள சிறப்புரிமைகள் என்பன மனித கௌரவத்தின் மீதான அசைக்க முடியாத நம்பிக்கையின் வெளிப்பாடாகும். சில அரசுகள் பேச விரும்பாத விடயங்களை நாம் கவனத்தில் எடுப்பது இதற்கு காரணமா?

ஒரு நாட்டில் இது கொடூரமான பயங்கரவாத எதிர்ப்பு உபாயமாக இருக்கலாம். இன்னொரு நாட்டில் இது சிறுபான்மையினர் அல்லது வந்தேறு குடிகளின் மீதான மனிதாபிமானமற்ற செயற்பாடாக இருககலாம்.

சில அரசுகள், ஓரினசேர்க்கையாளர்கள், இருபாலின, பால்மாறும் தன்மையினர், பெண்கள், தோலில் வெண்மை படர்வோர், சில சாதியினர், சில சமயத்தினர், இனத்தவர்கள் ஏனையோரைவிட குறைவான உரிமைகள் உள்ளவரென நினைக்கலாம் என பிள்ளை கூறினார்.

கடந்த ஆறு வருடங்களில் தனக்கு அறிவூட்டும் முழுமையான அனுபவங்கள் கிடைத்ததாக கூறிய அவர் மனித உரிமை பேரவை வழங்கிய வாய்ப்புகளுக்கு நன்றி கூறினார்.

ஒரு மாற்றத்துக்கு தான் உதவியதாகவும் பலமான ஒரு பரப்புரையாளராக இருந்ததுடன், பயம் அல்லது பாரபட்சமின்றி பேசிய ஒருவராக தான் செயற்பட்டதாக நம்புவதாக அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## நாடாளுமன்றமே முடிவு செய்யும்

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் அமைக்கும் எந்தவொரு விசாரணைக் குழுவையும் நாட்டுக்குள் அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து நாடாளுமன்றமே முடிவு செய்யும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் ஒரு பொதுக கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா கொண்டுவந்த ஒரு தீர்மானத்தை அடுத்து, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தலைவர் நவி பிள்ளை நேற்று அறிவித்ததை அடுத்தே மகிந்த ராஜபக்ஷவின் இந்தக் கருத்து வந்துள்ளது. (எ-11)

## தமிழக மீன...

ஸ்வரம் மீனவர்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துகின்றனர்.

மேலும் பாம்பன் பகுதியில் உள்ள ஆயிரம் மீன்பிடிப்பாளர்கள், ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்கின்றனர்.

இதேவேளை மண்டபம் பகுதியைச் சேர்நத 3 ஆயிரம் மீனவர்கள் இந்த போராட்டத்தில் கலந்துக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பாடசாலை மாணவி...

வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்ச்சியின் முடிவில் விருந்தினர்களும் மாணவர்களும் பாடசாலையில் இருந்து பிரதான வீதிகளினூடாக மன்னார் பெரிய பாலம் வரைகரும் ஊர்வலமாகச் சென்று கடற்கரையைச் சுத்தப்படுத்தும் சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

சிரமதானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இராணுவப் புலனாய்வாளர் சிலர் மாணவிகளை வரிசையாக நிற்க வைத்துப் புகைப்படமெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இது, அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து அவர், அவர்களைப் புகைப்படங்களை எடுக்க விடாது தடுத்ததோடு இராணுவப் புலனாய்வுத்துறையினரை அங்கிருந்துவிரட்டும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளார். இராணுவத்தினரினதும் இராணுவப் புலனாய்வுத்துறையினரினதும் தீவிர கண்காணிப்புக்குள் மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வட மாகாண் சபை உறுப்பினர்கள் வைத்திய கலாநிதி ஞா.குணசீலன், அ.அஸ்மின், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட அதிகாரி ஹிமலதா ராஜேஸ்வரன் உட்பட மன்னார் கல்வி வலயத்தின் பல்வேறு பாடசாலைகளையும் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப பெருந்தொகையானோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

## 101 புதிய...

யாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கும் போது, உங்களது ஆற்றல்களுக்கு அமைவாக இன்றைய தினம் உங்களது வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கை கிடைத்துள்ளது.

இம் மாவட்டத்தில் எமது அரசியல் நிலைப்பாட்டைப் பொறுத்தே இந்நியமனங்கள் உங்களுக்கு வழங்கப்ப்டுகின்றன.

அரசாங்கத்தின் கொள்கையினைப் பின்பற்றி அதனை செயற்படுத்தி எமது மக்களின் நலன் சார்ந்து நீங்கள் அனைவரும் பணியாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய பிரதிநிதிகளாக நீங்கள் சரியான திசை நோக்கி முன்னேற்றகரமான வழியில்செல்ல வேண்டும்என்பதே எனது விருப்பமாகும் என்றார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோடிக்கு...

இலங்கை விவகாரத்தில் தலையிட வேண்டாம் என்று வலியுறுத்தி கொள்ளுப்பிட்டியிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரால யத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள குழுவினர் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் உருவப் பொம்மையையும் தீயிட்டு எரித்துள்ளனர். (எ-11)

## விசாரணை...

இந்த தீர்மானத்தின் பிரகாரம் இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு ஐ.நா பொதுச் சபையினால் கடந்த வாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இலங்கை மீது மேற்கொள்ளப்படவுள்ள இந்த விசாரணைகளுக்கு தேவையானது என்று மதிப்பிடப்பட்ட 1,460,900 டொலர் நிதியை ஒதுககுவது மற்றும் அதனைச் செலவிடுவதற்கான அங்கீகாரத்தை ஐ.நா பொதுச்சபை வழங்கியிருந்தது.

இத்தகையதொரு நிலையில், இந்த விசாரணைகளுக்கு தேவையான நிதியை கிடைக்காமல் தடுத்து, விசாரணையைத் தாமதப்படுத்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. இதற்கு இந்தியாவும் ஆதரவு வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்த விசாரணைகளுக்கு தேவையான நிதி ஒதுக்கீட்டுக்கு அங்கீகாரம் கிடைப்பதை அரசாங்கத்தால் தடுக்க முடியவில்லை.

ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, அரசாங்கம் பாகிஸ்தானின் உதவியுடன் நிதி ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினைகளை எழுப்பி, விசாரணையைத் தாமதப்படுத்த முயற்சித்திருந்தது.

இதையடுத்து, இடம்பெற்ற வாக்கெடுப்பில் பாகிஸ்தானுடன் இணைந்து இந்தியா விசாரணையைத் தாமதப்படுத்த வாக்களித்த போதும், அது தோல்வியில் முடிவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## யுத்தக்...

யுறுத்தியுள்ளனர்.

விசாரணை நடத்தும் பிரதிநிதிகளுக்கு இலங்கைக்கு விஜயம் செய்ய அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்,

இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை ஒழுங்கு செய்தமை வரவேற்கப்பட வேண்டியது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அமெரிக்கப் பிரதிநிதி கீத் ஹார்பர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளை ஒழுங்கு செய்தமைக்காக நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் சர்வதேச விசாரணைகளின் மூலம் உறுதி செய்யப்படும்என அவர்தெரிவித்துள்ளார். (எ-11)


220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION | MMBL Money Master

- அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகள்
- கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விண்ணப்ப சேவை
- அன்பளிப்பு பொருட்கள், உணவுப் பண்டங்களை வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்
- 3 - 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.



25kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்

இல.271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல் சிரோனிற்கு முன்பாக)
தொ.பே.: 021 222 7835

கிளைகள்:

7 நாட்களும் எமது சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்

(6607)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழி

கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது, யாழில் 1976 முதல், 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DOPLOMAS பிரெஞ்சு மொழி பெயர்ப்புகள் AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம்

பிரான்ஸ் செல்வோர் அனுமதிகளுக்கு முந்துங்கள் 14.06.2014 11 am

021 222 8093 61, கச்சேரி -நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(6727)



உடனடி வேலைவாய்ப்பு

எமது அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்த இளைஞர்கள் தேவை!

- பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்ப்பும், வெளிநாட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்.
- பயிற்சியின் போது 15,000/ பின் 30,000/
- வயதெல்லை 18-35
- தங்குமிட வசதிகள் உண்டு

இன்றே அழையுங்கள்:-0775566224, 0777981471

(சி-7628)





திரு.அ.பங்கையற்செல்வன்



திரு.ந.கி.ஜயசுந்தர

பாராட்டி வாழ்த்துகின்றோம்

10-06-2014 அன்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில், நீதிவான் M.I வாகப்தீன் முன்னிலையில் சமாதான நீதிவானாக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட எமது பாடசாலை முதல்வர் திரு.அ.பங்கையற்செல்வன் அவர்களையும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் திரு.ந.கி.ஜயசுந்தர அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
கிளி-கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

(சி-7827)



SPEED LANKA EXPRESS

வெளிநாடுகளுக்கான தபால் பொதிகள் சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

(C-7618)



Obtain a world class UK Qualification

HND IN SOFTWARE ENGINEERING

HND IN BUSINESS MANAGEMENT

PEARSON edexcel
advancing learning, changing lives



DURATION : 2 YEARS

New Batches Start on: 14/06/2014

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900
071 7775 666

IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk

(C-7620)



ஸ்ரீ சீரடி சாயி பாபாவின் நூதன உற்ஷவமூர்த்தி மஹா கும்பாபிஷேகப் பெருவிழா
(12-06-2014)

அன்பான பக்தர்களே!



காலை 7 மணிக்கு- தான்யவாசம்
ஜலாதிவாசம்
சயனா ரோஹணம்
(பக்தர்களும் பங்கு கொள்ளலாம்)
பால்காப்பு-காலை 8.30 மணிமுதல் 10 மணிவரை
மஹா கும்பாபிஷேகம் - காலை 11 மணிக்கு
பாபாவின் திரு உலா-மாலை 4.30 மணிக்கு நடைபெறும். வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து நடைபெறும்.

மஹா கும்பாபிஷேக பிரதம குருமணி
சிவப்பிரம்மஸ்ரீ உ.கிருஸ்ணராசக்குருக்கள்
(சிவாச்சாரிய திலகம்)

அனைவரும் வருக! பாபா அருள்பெற

"சீரடி சாயி மந்திர்"

314, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P:-0777222568, 0213211605

(6558)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.